ரமணோதயம்

அக்டோபர் 2019
காலாண்டு

அண்ணாமலை தீப இதழ்
விலை ₹ 20



ரமணோதய அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள் தயவுசெய்து தங்களது சந்தாவைப் புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச் செலுத்தவோ செய்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்

உதயம் 19 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 1

ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

அண்ணாமலை தீப இதழ்

அக்டோபர் 2019

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20

ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:

ஆ. குமார் ராஜா: 9444261296

மின்னஞ்சல்: arunamramanam@gmail.com

மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:

ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்

41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4

தொலைபேசி: 24611397

பொருளடக்கம்

அண்ணாமலை தீப இதழ், அக்டோபர் 2019

வ.எண்	பொருள்		ப.எண்
1	ஆசிரியர் உரை		3
2	ஔவைக் குறள்		16
3	இனிவரும் திருநாட்கள்		20
4	பேரமைதி நிலவிய பெருநாட்கள்		21
5	ரமணாயனம்	க்ரேஸி மோஹன்	26
6	அக்ஷர மணமாலை ஒரு தத்துவக் கருவூலம் - பகுதி 15	டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன்	33
7	பகவான் புத்தரும், பகவான் ரமணரும் சந்திக்கும் சிறப்பு	சு. பரமேஸ்வரன்	47
8	எல்லா மைலார்ட்-4	வி. நிரஞ்சன்	56
9	ரமண மையங்களை நோக்கி தொடர் கட்டுரை		64
10	நைவேத்தியம்		74
11	செய்திகள்		74

ஆசிரியர் உரை

பாதை வகுத்த பரமன்

வேதகாலத்தே ஒரு பன்னிரெண்டு வயது சிறுவன் ஞானம் பெறவேண்டி மரணத்தின் அதிதேவதையான யமனின் முன் நின்று, "எனக்கு முன்னே பாதை பல விரிகின்றனவே! நான் எது வழியாகச் சென்று உய்வினை அடைய முடியும்?" என்று வினவினான். அந்தச் சிறுவனே நசிகேதஸ். பல்வேறு விரியும் பாதைகளின் துவக்கத்தில் நின்று கலங்கும் சிறுவனுக்கு 'ஸ்ரேயஸ்' எனும் ஞானப் பாதையைத் தேர்ந்து எடுப்பாய் என வழிய கூறியவன் மரணதேவன். மரணத்தை நேருக்கு நேர் சந்தித்து, மரணமில்லாப் பெருவாழ்வைப் பெற்று அதனை அடையும் வழியை அகில உலகிற்கும் காட்ட வந்தவன் மற்றொரு 16 வயதுச் சிறுவன். அந்தச் சிறுவன்தான் தெய்வீக ஞானத்தின் ஊற்றுக்கண்ணாகிய பகவான் ரமணர். அவர் பிறவி நம்மைப்போல் கர்மத்தின் விளைவால் வந்த பிறவி அல்ல. மனித இனம் உய்வினை அடைய எவ்வழியைத் தேர்ந்து எடுப்பது என்று குழம்பிய நிலையில், "நேர்பாதை இதோ உள்ளது" என்று ஆன்ம விசாரப் பெருநெறியை விளக்க வந்தவர் உள்ள பொருளான 'இருப்பு உணர்வு' உள்ளத்தே உள்ளது. வெளியே செல்லும் மனத்தை உள்நோக்கித் திருப்பி இதயத்தே சார்வாய்! என்று உள்ள பொருளாம் ஆன்மாவுக்கு நேர்பாதை காட்டியவர். ஞானத் திறவுகோலை உலகிற்கு எளிதுறத் தந்தவர். ஞானப் பெருங்கடலாய் இருந்தபோதும் மிக எளிய

மக்களிடையேயும், சிறார்கள் மத்தியிலும் கலந்து வாழ்ந்தவர். வால்மீகி ராமனைப் பற்றிக் கூறும்போது அயோத்தி மக்களிடையே தான் அரச வாரிசு என்ற எண்ணமே இல்லாமல் அவர்தம் தயக்கத்தினை நீக்கி ஒன்றாய் உறைந்தவர். அரச குமாரன் என்ற அச்சத்தினால் அவர்கள் பேசத் தயங்கியபோது தானே முன் சென்று பேசுபவன்; இனிமையாய் மொழிபவன் 'பூர்வ பா4ஷி' 'ம்ருது பா4ஷி' எனக் குறிப்பிடுகிறார். ஐம்பத்து நான்கு ஆண்டுகாலம் அருணை மாந்தரிடை வேறுபாடின்றி உலவினார்.

தனது மிக இளம் வயதிலேயே இறப்பு பற்றிய ஆராய்ச்சியில் துணிந்து இறங்கி, தன்னுள் இறவாமல் இருக்கும் ஒன்றினைக் கண்டுபிடித்தவர். இந்த ஆய்வின் முடிவே அவரது 'நான் யார்' செய்தியின் வித்து. தத்துவங்களையும் தர்க்கங்களையும் தாண்டிய பேருண்மைக்கான நேர்வழி.

"ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர் விட்டுளன் எங்கள் சோதி"

என்று 1400 ஆண்டுகட்குமுன் ஞானசம்பந்தர் கூறியதை மீண்டும் நிலைநாட்ட வந்தவர் பல்வேறு பொய்மையான 'நான்'களைப் புறந்தள்ளி, ஒரே மெய்மையான ஆத்மாவாம் நான் என்பதைப் பற்றச் செய்தவர். இதனை நாடும் வழியையும்,

"திரும்பி அகந்தனை தினமகக் கண் காண்" என்று வழிகாட்டியவர் பகவான். தீவிர முனைப்புடன் 'நானை'த் தேடும் முயற்சியில் இறங்கினால், அனைவருமே அந்த உண்மையினை உணரலாம். அதுவே ஒவ்வொருவரது பிறப்புரிமை என்கிறார் பகவான். அருணாசல அஷ்டகம் எட்டாவது பாடலில், இந்த ஆத்ம சாட்சாத்காரம் சாதகனது பிறப்புரிமை என்கிறார் பகவான்.

கடல்எழும் எழிலியால் பொழிதரு நீர்தான்
கடல்நிலை அடைவரை தடைசெயின் நில்லாது



உடல்உயிர் உனில்எழும்; உனையுறு வரையில்
உறுபல வழிகளில் உழலினும் நில்லாது
இடவெளி அலையினும் நிலையிலை; புள்ளுக்கு
இடநிலம் அலது இலை; வருவழி செல்லக்
கடன்உயிர் வருவழி சென்றிட இன்பக்
கடல்உனை மருவிடும் அருணபூ தரனே.

அருணாசலனே! சமுத்திரத்தில் இருந்து ஆவியாகி, மேகமாகி வந்த நீர் உள்நாட்டில் சென்று மழையாகப் பொழிந்து ஓடையாகி, நதியாகி, மீண்டும் தனது மூலமான கடலைச் சென்று அடையும்வரை என்ன தடை வந்தாலும் நின்றுவிடாது. அதுபோல உயிர்கள் அனைத்துமே உன்னிடத்திலிருந்தே உதிக்கின்றன. மீண்டும் உன்னையே வந்து நிச்சயம் சேர்கின்றன. அதுவரை கர்ம வினையால் எத்தனை பிறப்புக்கள் எடுத்தாலும், அங்கங்கே நின்றுவிடாது, இறுதியில் மூலமான உன்னை அடைந்தே தீருவர் எனப் பகவான் உறுதி அளிக்கிறார்.

நம்முடைய ஆத்ம சாதனையில் பல்வேறு தடைகள் ஏற்படலாம்; கவனம் சிதறடிக்கப் படலாம். கவனக்

குவிப்பே சாதனையின் அடித்தளம். பகவானின் அருளைப்பெற பிரார்த்தனை செய்துகொண்டு உள்ளே ஆழுங்கள். இதயக் கேணியின் உள்ளே இறங்க ஒரு கயிறு தேவைப்படுகிறது. பகவான் 'நான்' என்பதைக் கவனித்துப் பின்பற்றுவதையே கயிறாகக் கொள்ளச் செய்கிறார். மாற்று வழியாக,

ஒடுக்க வளியை ஒடுங்கும் உளத்தை
விடுக்கவே ஓர்வழி உந்தீபற
வீயும் அதன்உரு உந்தீபற

(உபதேச உந்தியார், 14)

பிராணாயாமத்தால் அல்லது உட்சுவாசவெளிசுவாச கதியையே நோக்குவதால் மனது ஒடுங்கத் தொடங்கும். ஒடுங்குகின்ற மனத்தை, நான் யார் என்ற விசாரணையிலேயே செலுத்தினால், மனத்தின் உரு கரைந்து ஆத்மாவில் ஒன்றலாம் என வழி காட்டுகிறார் பகவான். மூச்சைக் கவனித்து அதனையே பின்பற்றும் வித்தையை நீங்கள் பயின்றால் ஹிருதய குகை எனப்படும் ஆன்மிக மையத்துள் நீங்கள் இறங்கலாம். இங்ஙனம் உட்செல்லச் செல்ல நமது மனதின் வெளிப்புற நடவடிக்கைகள் மெதுவாக ஒடுங்குவதைக் காணலாம். ஓர் ஆழ்ந்த மௌனம் தழுவ ஆரம்பிக்கிறது. நமது உள்ளுறை ஆத்மா காந்தம் ஊசியை இழுப்பதுபோல நம் மனதை உள்நோக்கி இழுக்கிறது. பொறுமையுடனும் சிரத்தையுடனும் பயிற்சி செய்யச் செய்ய ஆத்மாவின் தரிசனத்தை நாம் பெறலாம். ஞானியின் கண்களுக்கு, பன்முகத் தோற்றம் பல்வேறு உலகப் பொருட்களின் தவிர்க்க இயலாத ஒருமை புலப்படுகிறது.

யோமாம் பஸ்யதி ஸர்வத்ர
ஸர்வம் ச மயி பஸ்யதி

என்று ஞானியைப் பற்றி கீதை கூறுகிறது. வள்ளலார் கூறும் ஞானியின் நிலையும் இதுவே.

எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உகக்கின்றார்
யாவர். அவர் உளம்தான் சுத்த
சித்துஉருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடம்

உண்மையான துறவு என்பது சரணாகதியே. காவி உடை தரித்து உலகிலிருந்து ஓடுவதல்ல. அப்படிப்பட்டவன் எங்கே ஓடினாலும் தன் உலகையும் தன்னுடனேயே தூக்கிச் செல்வான். உண்மையான துறவு என்பது தன்முனைப்பை அடியோடு விடுவதே. இந்த உண்மையைத் துறவு பெற சத்சங்கம் பேருதவி செய்கிறது. மெய்ஞ்ஞானிகளின் அண்மையில் நமது ஆன்மிக உணர்வுகள் செம்மைப்பட்டு, கீழான வண்டிகளின் பிடிதளர்வு அடைந்து, ஆன்மிக முன்னேற்றம் ஏற்படுகிறது. நெருப்புக்கு அருகே வைக்கப்பட்ட ஈரவிறகு நம் முயற்சி ஏதும் இன்றித் தானே காய்ந்து தீப்பற்ற ஆயத்தம் ஆக மாறுகின்றன. ஞானிகளின் சாந்தியும் இவ்வாறு ஆனதே. இத்தகைய தெய்வ சாந்நித்யம் கிடைக்கவில்லை எனில் வருத்தத் தேவையில்லை. அவரது எழுத்துக்களும் உபதேசங்களுமே நமக்குத் துணைபுரியும் சத்சங்கமாக அமைகின்றன. ஞானியின் வார்த்தைகள் உள்ளூற ஞான வீர்யத்தை சுமந்து வருகின்றன. அதைப் பயில்வதே சத்சங்கம்.

பகவான் பக்தியைப் பற்றியும் கூறுகிறார். ஆன்மிகத் தேடலுக்கு நமது உணர்ச்சிகள் எப்படி பழக்கப்படுத்த வேண்டும் என்று காட்டுகிறார். பக்தி என்பது ஆத்மாவுடன் தொடர்பற்ற, மனம் சம்பந்தப்பட்ட உணர்ச்சி அல்ல. ஒருவேளை எனக்கு இதுவேண்டும் என்ற நோக்கத்துடன் தொடங்கினாலும் ஆசை நிறைவேறுவதுடன் அது நின்று போகாமல் தொடர்ந்து வளர்ந்து, பரிசுத்தமான பரபக்தியாய் மாறுகிறது.

தன்னுடைய தந்தையின் மடியில் தன் சித்தியின் மகன்போல் தானும் அமரவேண்டும் என்று வேண்டியே தவம் இயற்றிய துருவன், பகவான் தோன்றிய மாத்திரத்தில் அத்தனை ஆசைகளையும் விடுத்து ஆத்ம சாட்சாத்காரம் பெறவில்லையா? என்னுடனே என்றும் கண்ணன் இருக்கவேண்டும் என்று தன்னல நோக்குடன் துவங்கிய கோபிகைகளின் பக்தி

நகலு கோபிகா நந்தநோ ப4வான்
அகில தே3ஹினாம் அந்தராத்ம த்ருக்

நீ கோபிகளின் பிரியத்துக்குரிய மஹான் மட்டுமல்ல. இந்த அகில உலகத்தில் வாழும் அத்தனை உயிர்கட்கும் நீயே அந்தராத்மா என்ற அளப்பரிய ஞானம் பெறவில்லையா?

இந்த ஆன்மிக எழுச்சி பெற தேவையானவற்றை சனத் சுஜாதர் நான்கு விதமாக வகைப்படுத்துகிறார் என்று காண்போம்:

1. சாஸ்திரம்: ஆன்மிக தத்துவங்கள், அப்யாஸங்கள் பற்றிய போதனைகள்
2. உத்சாஹம்: குறையாத தன்முயற்சி
3. சத்குரு: ஆசான்
4. காலம்.

பகவான் கூறுவதோ ஆன்மிக வரலாற்றிலேயே மிகச் சுருக்கமான போதனை. “நான் யார்” என்பதை உள்முக நோக்கால் அறி என்பதாம். இது வெறும் அறிவார்ந்த கேள்வி அல்ல. நமது அன்றாட வாழ்க்கையின் அடித்தளத்தையே உலுக்கும் விசாரணை இது. இது வெறும் மனோதத்துவ வாதிகள் ஆராயும் ஆழ்மனத்தைப் பற்றிய விசாரணை அல்ல. இது ஆதிகாலம் தொட்டே உண்மையில் நான் யார் என்பதை உரித்து எடுக்கும் கேள்வி. ‘தன்னை அறிந்து கொள்’ என்பதையே ஞானிகள் காட்டிய வழியின் அடிப்படைக் கல்.

தைத்திரிய உபநிடதத்தில் படிப்படையாக இந்த விசாரணை நிகழ்த்தப்படுகிறது. அன்னமய சரீரம், பிராணமய சரீரம், மனோமய சரீரம், விஞ்ஞானமய சரீரம், ஆனந்தமய சரீரம் அனைத்தையும் ஒவ்வொன்றாக "இது நான் அல்ல" விலக்கி பாரமார்த்திக சத்யத்தின் நேருக்குநேர் நிற்கும்போது, மனது சலனமற்று ஒடுங்குகிறது. அது நுண்மையாகிறது. அந்த நிலையில் அடியாழத்தில் இருந்து ஆன்மிகக் கதிர்கள் வெளிப்படுகின்றன. இந்தப் பேரறிவு முயற்சியால் வந்தது அல்ல. தானே வெளிப்பட்ட ஞானம் அது. இதனைப் பெற ஒரே அடிப்படைத் தேவை, 'நான் யார்' என்பதை அறிய வேண்டும் என்கிற தீவிர பசி, மற்ற எல்லாவற்றையும் விழுங்குகின்ற அபரிமிதமான பசி.

யானாகிய என்னை விழுங்கி வெறும்
தானாய் நிலைநின்றது தற்பரமே

என்று அநுபூதி கூறுவதுபோல் அனைத்தையும் விழுங்கும் தீச் சுவாலை போன்ற ஆர்வமே தேவை.

இந்தத் தீவிர சிரத்தை நம்மைக் கவ்வும்போது, சாதகன் பரம்பொருளால் தேர்ந்தெடுக்கப்படுகிறான். நமது முயற்சியால் இது வருவதல்ல.

விவ்ருனுதே தநூம் ஸ்வாம்

பரமாத்மாவே அத்தகையோனை தேர்ந்து எடுத்து அணைத்துக் கொள்கிறது என்று கடோபநிஷதம் கூறுகிறது. அந்தப் பரமாத்மாவே சாதகனைத் தன் முயற்சியில் தூண்டுகிறது; அதுவே உள்நோக்கித் தள்ளுகிறது. அதுவே அவனை உள்ளிருந்து உள்நோக்கி இழுக்கிறது. அதுவே வழிகாட்டும் சத்குருவாகவும் வருகின்றது.

'நான்' என்ற தன்னிலையும் நீ, அவன், அது என்ற படர்நிறை, அனைத்துமே எண்ணங்கள்தானே. ஏன் 'நான்' என்ற எண்ணத்தையே பகவான் உள்நோக்கி ஆராயச் சொல்கிறார் என்ற கேள்வி எழலாம்.

சாதுஓம் சுவாமி விளக்கியபடி, 'நான்' என்ற தன்மை எண்ணத்திற்கு ஒரு தனியான குணம் உண்டு. 'நான்' என்பது எது என்று அதன் மீது நம் நாட்டம் திரும்பினால் அது பதுங்கும் குணம் உடையது. முன்னிலை படர்க்கை எண்ணங்களோ, அவற்றின் மீது நம் நாட்டம் செல்லச்செல்ல, அவை விரியும் குணம் உடையவை. ஒரு film projectorஇல் இருந்து படத்திரையை முன்னே தள்ளத்தள்ள படங்கள் விரிந்துகொண்டே போகின்றன, ஒளி தோன்றுகின்ற projector-இன் அருகே திரையை நகர்த்தும்போது உருவங்கள் சிறிதாகி சிறிதாகி இறுதியில் ஒரு புள்ளியில் ஒடுங்குவதுபோல மனத்தின் நாட்டம் முன்னிலை படர்க்கை மேல் செல்லச்செல்ல எண்ணங்கள் விரிகின்றன. மனத்தின் மூலத்தை நோக்கி நாட்டம் திரும்பினால், முதல் எண்ணமாகிய மனமே புள்ளியாக ஒடுங்குகின்றது.

இதனையே பகவான் ஆன்ம வித்தைக் கீர்த்தனத்தில் கூறுகிறார்.

ஊனார் உடல்இதுவே நானாம் எனும்நினைவே
நானா நினைவுகள்சேர் ஓர்நார் எனும்அதனால்
நானார் இடம்எதென்று உட்போனால் நினைவுகள்போய்
நான்நான் எனக்குகைஉள் தானாய்த் திகழும்ஆன்மா

(ஆன்ம வித்தைக் கீர்த்தனம், 2)

நான் என்னும் அகந்தையை ஒழிக்க, தன்மையை (first person) ஆய்ந்து ஒழிப்பதே வழி, அதன் மூலம் முன்னிலை படர்க்கையும் முடிவுபெறும்.

"நானுதிக்கும் தானம் அதை நாடாமல் நான் உதியாத்
தன்னிழப்பைச் சார்வது எவன்."

(உள்ளது நாற்பது, 27)

அகந்தை அழிவிற்கு 'தன்னிழப்பு' என்ற அழகான சொல்லைப் பயன்படுத்துகிறார் பகவான்.

உள்ளது நாற்பது 25-ஆவது பாடலில் இந்த அகந்தையைப் பற்றித் தெளிவாக விளக்குகிறார் பகவான்.

உருப்பற்றி உண்டாம் உருப்பற்றி நிற்கும்
உருப்பற்றி உண்டுமிக ஓங்கும் உரு விட்டு
உருப்பற்றும் தேடினால் ஓட்டம் பிடிக்கும்
உருவற்ற பேய்அகந்தை ஓர்.

அகந்தையானது ஒரு தேகத்தை 'நான்' என்று பற்றிக்கொண்டு தோன்றுகிறது. (இந்தத் தேகத்தை 'நான்' என்று அபிமானித்தல்) அத்தேகத்தையே சார்ந்து நின்று இருப்புக் கொள்கிறது. அத்தேகத்தின் சார்பையே தன் அகங்கார வளர்ச்சிக்கான உணவாகக் கொண்டு வளரும். இந்த உடல் நசித்தால் வேறு ஒரு உடலைப் பற்றி வாழும். 'யார் இது' என்று நாம் விசாரிக்க ஆரம்பித்தால் உடனே இருப்பு ஏதும் இன்றி மறைந்து விடும். எனவே 'தேகமே நான்' என்று எழும் அகங்காரம் வெறும் பொய்யான பேய்த் தோற்றம் என்கிறார் பகவான்.

'மஹர்ஷி வாய்மொழி' என்ற நூலில் பகவான் இதுபற்றி விவரமாகக் கூறுகிறார்.

"இல்லாத ஒன்றை இருப்பதாக வைத்துக்கொண்டு, அப்படி கற்பிக்கப்பட்ட 'நானுக்கு' உய்வு தேடும்பொருட்டு மேற்கூறிய நான்கு யோக மார்க்கங்களையும் (பக்தி யோகம், கர்ம யோகம், ஞான யோகம், ஹட யோகம்) நீ ஆரம்பிக்க வேண்டி வருகிறது! நீ செய்யும் இந்த சாதனையே இல்லாத அகந்தைக்கு இருப்பைக் கொடுக்கிறதாக ஆகிறபோது, பின் எப்படி அது அகந்தையை அழிக்கும்! ஆன்ம விசாரம் தவிர மற்ற எவ்வித சாதனையிலும் சாதனையை நடத்தும்பொருட்டு, மனம் என ஒன்று இருந்தாக வேண்டும். மனம் இன்றி அச்சாதனையை நடத்துவது எப்படி? மற்ற சாதனைகளால் மனத்தை அழிக்க முயல்வது, திருடனே திருடனாகிய தன்னைப் பிடிக்க போலீஸ் ஆனது போல்தான்!

ஆன்ம விசாரம் ஒன்றே அகந்தையோ, மனமோ, ஜீவனோ உண்மையில் இல்லவே இல்லை என்னும் சத்தியத்தை வெளிப்படுத்தும். ஆகையால் நீ இன்றும் ஆய்ந்து காணாத இவ்வகந்தையினை, அழித்து, வேரோடு களைந்து சுட்டு எரிப்பாய். அவ்வாறு இன்றி, அதை ஆராயும் முன்னே, அது உண்மையில் இருக்கிறது என்று முடிவு செய்துகொண்டால் அதுவே நமக்கு விலங்காகி, இன்னும் காமம், க்ரோதம் போன்ற தடைகளை எல்லாம் உனக்குக் கற்பித்து அதை நாம் கடக்க வேண்டுவதற்கான வீண் முயற்சிகளையும் செய்ய வைக்கும் என்கிறார் பகவான். அதாவது, ஒன்றை ஆராயும் முன்பே அதை இருப்பதாக ஒப்புக்கொள்வது அறியாமை. இதுவே தளைகளை ஏற்படுத்துகின்றது.

நான்கு யோகங்களானவை: விளைவில் பற்று இல்லாமல் செயலைச் செய்தல் (கர்ம யோகம்) இறைவனை முழுமையாக நேசித்தல் (பக்தி யோகம்) அந்த இறைவனுடன் ஒன்றிணைந்து இருத்தல் (ஹட யோகம்), இறைவனைத் தானாகவே அறிதல் (ஞான யோகம்). மனிதன் செய்யும் நான்கு பெரும் பிழைகள், இந்த நான்கு யோகங்களைச் சரியாய் பின்பற்றாது இருத்தல். நிஷ்காம்ய கர்மம் செய்யாது இருத்தல், இறைவனிடம் பேரன்பு செலுத்தாது இருத்தல், இறைவனுடன் தொடர்பு (யோகம்) இல்லாது இருத்தல், இறைமையைத் தான் ஆகவே அறியாது இருத்தல் என்பனவாம். இந்த நான்கு பெரும் பிழைகளுமே யாரால் இயற்றப்படுகிறது? அந்த 'நான்' யார் என்று ஆய்வதே உண்மையில் கர்மயோகமும், பக்தி யோகமும், ராஜயோகமும், ஞான யோகமும் ஆகும். ஏனெனில் இவ்வாறு 'நான் யார்' என்று தேடினால், இந்த 'நான்' என்பதே இல்லாமல் போய்விடுகிறது. அப்போது இந்த நான்கு பிழைகளுமே இல்லாமல் போய்விடுகின்றன. என்றும் ஒளிரும் ஆன்மா ஒன்றே நிலையான வஸ்துவாய் உணரப்படுகிறது.

பகவான் இதனை உள்ளது நாற்பது அனுபந்தம் 14ஆவது பாடலில் விளக்குகிறார்.

வினையும், விபத்தி, வியோகம், அஞ் ஞானம்
இனையவை யார்க்கு என்றுஆய்ந்திடலே வினைபத்தி
யோகம் உணர்வு ஆய்ந்திட, நான்இன்றிஅவை
என்றும்இல்; தான்
ஆகமனலே உண்மை ஆம்.

இந்த விசாரணை முறையாம் ஆன்ம விசாரத்திற்கு அடிப்படைத் தேவை ஏகாக்கிர புத்தி. மனத்தின் ஒருமுகப்படுத்தும் சக்தி. பகவான் சந்நிதியில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியை நாம் இங்கு நினைவு கூறலாம். பகவான் சந்நிதியில் அமர்ந்து இருந்த ஒருவர் "பகவானே, எனக்கு ஆன்ம விசாரம் செய்ய இயலவில்லை. அது எனக்குக் கடினமாகத் தோன்றுகிறது. நான் தியானம் செய்யலாமா?" என்று கேட்டார். பகவான், "ஆஹா! செய்யலாமே! என்று விடையிறுத்தார். சற்று நேரம் கழித்து அந்த அன்பர் கூடத்தைவிட்டு வெளியே சென்றுவிட்டார். அவர் சென்றவின் பகவான் அன்பர்களை நோக்கி, "அவர் ஆத்ம விசாரம் செய்வது மிகவும் கஷ்டம் என்றும், அதனால் அதனைத் தன்னால் செய்யமுடியாது என்றும் தியானம் செய்யலாமா என்றும் கேட்டார். அவரே தான் விசாரம் செய்யமுடியாது என்று கூறும்போது அவரை நான் விசாரம் செய்யவேண்டும் என்று எப்படிக் கட்டாயப்படுத்த முடியும்? அதனால் அவர் தியானம் செய்யட்டுமா என்று கேட்டபோது, சரி என்று சொன்னேன். சில நாட்களுக்குப் பின் அவர் வந்து, "பகவானே, என் மனம் தியானத்தில் நிலைபெற முடியவில்லை. நான் ஜபம் செய்யட்டுமா?" என்று கேட்பார். நான் அதற்கும் "சரி, செய்யலாமே!" என்றுதான் கூறவேண்டும். இன்னும் சிலநாட்கள் கழித்து அவர் வந்து "என் மனம் ஜபத்தில் ஒருமுகப் படவில்லை. என் நாக்கு மட்டுமே ஜபத்தைச் சொல்கிறது. மனமோ பல்வேறு எண்ணங்களின் பின்

ஓடுகின்றது. எனவே நான் பூஜை, வழிபாடு இவற்றைச் செய்யலாமா?" என்று கேட்பார். நான் அதற்கும் "சரி; செய்யலாம்" என்பதைத் தவிர வேறு என்ன கூறமுடியும்? ஒருவன் ஸ்தோத்திரமோ, பூஜையோ, ஜபமோ, தியானமோ எது ஒன்றைச் செய்தாலும் உண்மையான முயற்சியுடன் செய்வானாகில் ஆன்ம விசாரம் செய்வதற்கும் அந்த அளவு முயற்சியே போதும். இந்த மாதிரி சந்தேகங்கள் எல்லாம் உண்மையாகவே எந்த சாதனையையும் செய்து பலன் அடைய மெய்யான சிரத்தை இல்லாதவர்கட்கே உண்டாகும். அவ்வளவுதான்! தான் எந்த சாதனை செய்வதாக இருந்தாலும், அலையும் மனத்தை திருப்பி இழுத்து வந்து குறிப்பிட்ட லட்சியத்திலேயே நிறுத்த முயல்வது இன்றியமையாதது. ஏன் அதை ஆத்ம விசாரமாகிய தன்னாட்டத்தில் இழுத்து வந்து நிறுத்திப் பழகக் கூடாது?" என்றார்.

இந்த ஆன்ம விசாரணை மார்க்கத்தையே பகவான்,
எம்மார்க்கம் எதனினும் இம்மார்க்கம் மிக்கெளிது

என்றும்

மார்க்கம் நேர்ஆர்க்கும் இது

என்றும் குறிப்பிடுகிறார்.

'நான்' என்ற உணர்வைப் பற்றிக்கொண்டு அதில் மேன்மேலும் அடையும் தன்முனைப்பின் அடர்த்தியே உள்ளாழ்தல் என்பதாம். எண்ணங்களை நோக்கும்போது 'அடுத்த எண்ணம் எது?' என்ற கவலை கூடாது. தன் இருப்புணர்வை நோக்கி, கூர்ந்த மதியுடன் மனம், மூச்சு இவற்றை அடக்கி உள் ஆழ்ந்து செல்லுதலே ஞான நெறி (உள்ளது நாற்பது 28).

எண்ணங்களின் மேற்பரப்பிலேயே, உலாவிக் கொண்டு உள்ளே ஆழாமல் சாதனை செய்கிறேன் என்பதைப் பற்றி பகவானே கேலி செய்கிறார்.

தான்இருந்தும் தானாகத் தன்னைத்தான் நான்எவன்
யான்இருக்கும் தானம்எது எனக்கேட் பானுக்கு
யான்எவன் எவ்விடம் யான்உளன் என்றமது
பானனை ஈடு பகர்

(ஏகான்ம பஞ்சகம், 2)

எப்போதும் ஆன்ம சொரூபமாகவே தான் விளங்கிக் கொண்டு இருந்தும், அதைத் தனக்கு அன்னியமாகக் கருதி, தான் உண்மையில் ஆத்மா என்று உணராமல், "நான் யார்? நான் இருக்கும் இடம் எது?" என்று ஆத்ம விசாரணையை செய்வதாக எண்ணிக் கொள்பவனை, "நான் யார்? நான் எவ்விடம் இருக்கிறேன்?" என்று கேட்கும் மதுபானப் போதையில் மயங்கிக் கிடப்பவனைப் போலாவன் என்கிறார் பகவான்.

இதுவரை தன்னைச் சிறு உடலாக மட்டும் எண்ணி வந்தவன், பரந்து விரிந்த நமது அகண்டாகார வடிவம் அறியாமையினால் நாமரூபங்களோடு முன்னிலை, படர்க்கைப் பொருளாகத் தவறாக எண்ணப்பட்டு இருந்தது. உண்முக நாட்டத்தால் நமது உண்மையான தன்மை தெரிந்தபிறகு, அனைத்துமே தனக்கு அன்னியம் அல்ல; அதைப் பார்க்கும் போதெல்லாம் தன்னையே பார்க்கிறோம் என்ற ஞானம் புலனாகிறது.

ஒருமுறை பகவான் சாளரத்தின் வழியே அருணாசலத்தை நோக்கிய வண்ணம் அமர்ந்து இருந்தார். அன்பர் ஒருவர் "பகவானே, அண்ணாமலையைப் பார்க்கின்றீர்களா?" என்று கேட்டபோது, பகவான், "நான் என்னையேதான் பார்க்கிறேன்!" என்று விடை அருளினார்.

உரையாடலை மீண்டும் தொடர்வோம்.

பகவான் பணியில் தங்கள்,

ராம் மோஹன்.

ஔவைக் குறள்

6. அங்கிதாரணை

குறள் 51: அந்தத்து இலங்கி அழல்போலத் தான்நோக்கில்
பந்தப் பிறப்பு அறுக்கலாம்.

பொருள்: மூலாதாரத்தில் மூண்டு எழுகின்ற ஞானக்கனலை யோகப் பயிற்சியால் மேல் எழும்பும்படி செய்து சாதகன் கண்டால் இந்தப் பிறவிச் சுழலை ஏற்படுத்துகின்ற பந்தபாசத்தை அறுத்துவிடலாம்.

யோகசாத்திரம் கூறுவதாவது: சாதகனின் மூலாதாரத்தில் 'பார்த்தியாக்கி' என்ற கனல் உள்ளது. அரணிக் கட்டையில் அக்னி அடங்கி இருப்பதுபோல் இதுவும் மூலாதாரத்தே அடங்கி உள்ளது. கோல்கொண்டு கடையும்போது அரணிக் கட்டையில் இருந்து வெளிப்படுவது போலே, யோகப்பயிற்சி என்னும் கோலைக்கொண்டு கடையும்போது இந்த ஞானாக்கினி வெளிப்பட்டு, பிரம்ம தண்டத்தின் மேல் ஏறி, ஸஹஸ்ராரத்தை அடைந்து, முகத்தின் செவ்வொளியாய்த் திகழ்கின்றது. இந்த ஞானச் செவ்வொளி பிறவிக்குக் காரணமான அஞ்ஞான இருளை நீக்கி, பாசம் அறுத்து, பரிணாமம் அடையச் செய்கிறது.

குறள் 52: உள்ளும் புறம்பும் ஒருங்கக் கொழுஊரில்
கள்ள மலம் அறுக்கலாம்.

பொருள்: தேகத்தின் உள்ளே யோகப் பயிற்சியாலும், தேகி உணர்வு நீங்கிய வெளியே ஞானப் பயிற்சியாலும், சாதகனது முயற்சிக்குப் பலம் கொடுக்கும் அக்கினிச் சுடர் ஊறும்போது, கள்ளம் பொருந்திய ஆணவகர்ம மாயை மலங்களைக் கட்டறுக்கலாம்.

கொழு ஊரில்: சிவபிரானின் இடக்கரத்தே அக்கினி உள்ளது. இடப்புறம் யோகத்தில் சந்திரகலை

எனப்படுகிறது. சந்திரகலையின் தீச்சுடர், மேல் எழும்பி சிரசை அடையும்போது, உடல் தொடர்புக்குக் காரணமான மாயை இருள் அழிக்கப்படுகிறது.

குறள் 53: எரியும் கழல்போல உள்ளுற நோக்கில்
கரியும் கனல்உருவம் ஆம்.

பொருள்: ஒளிவீசிக் கொண்டிருக்கும் சத்குருவின் திருவடிகள்போல் இதயத்தின் உள்ளே ஒளிரும் ஆத்மாவை, வெளியே செல்லும் மனத்தை உள்நோக்கித் திருப்பிப் பார்த்தால் அஞ்ஞான அந்தகாரமாகிய பொய்ம்மை இருள்மாறி, ஞானாக்கினி வடிவமாகிறது.

திரும்பி அகந்தனைத் தினம் அகக்கண்கான்
தெரியும் என்றனைஎன் அருணாசலா

என்று பகவான் அக்ஷரமணமாலையில் கூறும் வழி இதுவே.

எண்ணாயிரம் ஆண்டு யோகம் இருக்கினும்
கண்ணார் அமுதினைக் கண்டுஅறிவார் இல்லை
உள்நாடி உள்ளே ஒளிபெற நோக்கினால்
கண்ணாடி போலக் கலந்து நின்றானே.

என்று மனத்தை உள்நோக்கித் திருப்பி இதயத்தில் பதித்தால், ஜீவன் பரத்தில் கலந்து கரைகின்றது எனத் திருமூலர் கூறுகிறார்.

குறள் 54: உள்ளங்கி தன்னை ஒருங்கக் கொழுஊரில்
வெள்ளங்கி தானாம் விரைந்து.

பொருள்: ஞானதேகத்தில் இடம் பெற்றுள்ள நாதக் கலையைத் தீவிரமான யோகசாதனை மூலம் வலுப்பெறச் செய்தால் மூலாதாரத்தில் உள்ள பிந்து கலையானது சக்திபெற்று மேல்நோக்கி விரைந்து சஹஸ்ராரத்தில் பொருந்துகிறது.

யோகப்பயிற்சியின் போது மூலாதாரமும், சுவாதிஷ்டானமும் பொருந்தி செய்யப்பட்டு விந்து உடல் ஆசைகளை நீங்குகிறது. மேற்கூறியபடி சிரசில்

ஞானஒளி காணும்போது, மூலாதாரத்தில் விந்து கதிமேல் முகமாகிறது. சிரசில் ப்ரணவ நாதமும் எழுகின்றது.

குறள் 55: உந்தியின் உள்ளே ஒருங்கச் சுடர்பாய்ச்சில்
அந்தி அழல்உருவம் ஆம்.

பொருள்: நாபிப் பகுதியில் முழுமையாக அக்நிக் கலையை எழுப்பினால், இருள் படர்ந்து இராக் காலமும் ஒளிமயம் ஆகும்.

மணிபூரகம் என்பது உந்தி (தொப்புள்) சார்ந்த பகுதி. உலக இச்சைகள் தூண்டப்படும்போது, அபான வாயு தூண்டப்படுகிறது. பிரணவ யோகமும் பயிலும்போது, இச்சைகள் நீக்கப்படுகின்றன. அப்போது அபான வாயு கீழ்நோக்கிப் பயணிக்கிறது. மேல்நோக்கிச் செல்லும் பிராண வாயுவுடன் பொருந்தி ஒளிமுகத்தை அடைகின்றது. அப்போது நள்ளிரவிலும் முகத்தின் முன் ஒளி தோன்றும்.

குறள் 56: ஐஐந்தும் ஆய அகத்துள் எரிநோக்கில்
பொய்ஐந்தும் போகும் புறம்.

பொருள்: பிரணவமும், ஐந்து இந்திரியங்களின் சக்திகளும் சேரும்படி, இதயத்தில் பிரணவ அக்நியை எழுப்புக. அப்போது பயனற்ற ஓசை, தொடு உணர்ச்சி, சுவை, வாசனை, காட்சி ஆகிய ஐந்து புலன்களையும் செயல்படச் செய்யும் காது, தோல், நாக்கு, மூக்கு இவை ஐந்தும் செயலற்றுப் போகும்.

குறள் 57: ஐம்பதும் ஒன்றும் அழல்போலத் தான்நோக்கில்
உம்பர் ஒளியாய் விடும்.

பொருள்: ஐம்பத்து ஒரு அக்ஷரங்களினால் கூறப்படும் (சுட்டிக்காட்டப்படும்) இடங்களையும், சக்திகளையும் ஞானாக்கினியின் தோற்றமாகவே சாதகன் கண்டால் அது தேவர்களின் ஒளியாகப் பரிணமிக்கும்.

குறள் 58: தூண்டும் சுடரைத் துளங்காமல் தான்நோக்கில்
வேண்டும் குறை முடிக்கலாம்.

பொருள்: ஞானசாதனையில் தூண்டப்படும் மூல அக்கினியை மனத்தில் எந்த ஓர் அசைவும் இன்றி சாதகன் நோக்கினால் வேண்டிய அனைத்துமே கிடைக்கும்.

குறள் 59: உள்ளத்தால் அங்கி ஒருங்கக் கொழுஊறில்
மெள்ளத்தான் வீடாம் விரைந்து.

பொருள்: உள்ளத்தில் மூல அக்னியை மெதுவாக அவசரப்படாமல் வளர்த்து, ஞானயோகத்தை நிலைபெறச் செய்தால் விரைவிலேயே ஆத்ம சாட்சாத்காரம் கிடைக்கும்.

ஞானாசிரியர் அனைவருமே சாதனையின்போது, சாதகன் அவசரப்படாமல் செயல்பட்டால் விரைவில் ஞானம் கிட்டும் என்கின்றனர்.

கண்ணனும் கீதையில் கூறுகிறார்:

ஸனைஹி ஸனைஹி உபரமேத்[3]
புத்[3]த்[4]யா த்[4]ருதிக்[3]ருஹீதயா
ஆத்மஸம்ஸ்த[2]ம் மனஹ் க்ருத்வா
கிஞ்சித்[3] அபி சிந்தயேத் (6.25)

மெதுவாக மெதுவாக இறைவனை அறிய முயல்க. அடைய வேண்டும் என்ற நோக்கத்தை உறுதியாக மனதில் இருத்தி, வேறு எந்த எண்ணமும் மீதுறாமல், படிப்படியாக முயல்வாய் என்கிறான் கண்ணன்.

மணிவாசகரும் சிவபுராணத்தில்,

"வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன்"

என்று சிவபிரானைக் குறிப்பிடுகிறார்.

குறள் 60: ஒள்ளிதாய் உள்ள சுடரை உறநோக்கில்
வெள்ளியாம் மாலை விளக்கு.

பொருள்: பிரகாசமாய் உள்ள அக்கினிக் கொழுந்தை அசைவு இல்லாமல் ஏகாக்கிரத்துடன் பார்த்தால் அஞ்ஞானமாகிய இருள் ஒழிந்து, பிரகாசமான வெண்மை ஒளியாகிய ஞானம் தோன்றும்.

குறிப்பு: ஏப்ரல் இதழில் வெளியான ஒளவைக் குறளின் தலைப்பு 'நாடி தாரணை' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை 'வாயு தாரணை' என மாற்றிக் கொள்க.

'ரமணோதயம்' - நன்கொடையாளர்கள்

N. சங்கரன், கோவை	ரூ.925
துர்கையா, மலேசியா	ரூ. 3000

இனிவரும் திருநாட்கள்

2019

அக்டோபர்	27	ஞாயிறு	தீபாவளி
டிசம்பர்	01	ஞாயிறு	கார்த்திகை தீபவிழா தொடக்கம்
	10	திங்கள்	கார்த்திகை தீபம்

2020

ஜனவரி	15	புதன்	பொங்கல்
பிப்ரவரி	8	சனி	சின்ன ஸ்வாமிகள் ஆராதனை
	13	வியாழன்	சுந்தரம் ஐயர் தினம்
	21	வெள்ளி	மஹா சிவராத்திரி
மார்ச்	20	வெள்ளி	ஸ்ரீ வித்யா ஹோமம்
	25	புதன்	தெலுங்கு வருடப் பிறப்பு
ஏப்ரல்	2	வியாழன்	ஸ்ரீராம நவமி
	14	செவ்வாய்	தமிழ் வருடப் பிறப்பு
	20	திங்கள்	ஸ்ரீபகவானது 70வது ஆராதனை
மே	16	சனி	மஹாபூஜை

பேரமைதி நிலவிய பெருநாட்கள்

14. விசாரமார்க்கம்

மிக எளிதாகக் காணப்படுபவை சில சமயங்களில் வெற்றி காண அரிதானவை ஆகி விடுகின்றன.

நாம் அலைபாயும் நமது மனதின் ஈர்ப்புகளைக் கட்டுப்படுத்தி, நமது நோக்கத்தின்மீது மனதினை ஆழ்ந்து பதிய வைக்க முயலும்போது, நமது மனம் அம் முயற்சியைத் தீவிரமாக எதிர்த்து, நமது கட்டுப்பாட்டினை எதிர்த்துச் செல்ல முயல்கிறது. யார் இந்தப் போரில் வெல்வது? நமது மனமா அல்லது நமது உறுதியா என்பது நமது ஆழ்ந்த சிரத்தையின் பால்பட்டு அமைகிறது. எண்ணங்களை உருவாக்குபவன் யார் எனக் கண்டறி; அப்போது நீ உன் குறிக்கோளில் வெற்றி பெறுவாய். இதுவே உண்மை. ஆனால் இதுவும்கூட பௌதிக முயற்சியைச் சார்ந்தது அல்ல. அதனைத் தாண்டிய ஒன்றாகும். இதனைப் புரிந்துகொள்ள இடைவிடாத அப்யாஸம் தேவைப்படுகிறது. நான் பகவானைச் சந்திப்பதற்குப் பல ஆண்டுகட்கு முன்னரே விசார வழியில் ஈடுபடத் துவங்கி இருந்தேன். அவரது அருள் என்னை இவ்வழியில் சிறப்பாக வழி நடத்தியது. பகவான் கூறும் விசார வழி இதுதான்.

சாதகன் தன்னைத்தானே ஆழ்ந்த தியானத்தில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். தன்னுடைய உடல், மனம், உணர்ச்சிகள் போன்று ஆத்மா நிரந்தரமற்ற ஒன்றல்ல. அது அழிவற்ற ஒன்று என்ற பேருண்மையை ஆழப் பதிக்க வேண்டும்.

இந்தப் பேருண்மை எந்த விதமுமான ஐயமும் இன்றி ப்ரக்ஞையில் நிலை கொள்ளும்போது, நான் யார்? என்ற தேடலை இடைவிடாமல் பின்பற்ற வேண்டும். வேறு ஒரு எண்ணம் மனதில் நுழைய முற்படும்போது, யாருக்கு இது எழுகிறது என்று விசாரித்து, அந்த எண்ணத்தை முளையிலேயே நசுக்க வேண்டும். எவ்வளவுக்கு எவ்வளவு இந்த விசாரத்தை இடைவிடாமல் செய்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு இதன் வெற்றியும் தலைப்படும். இந்த யுத்தத்தில் தோல்வியுறும் அலைபாயும் மனம், தனது தோல்வியை ஒப்புக்கொண்டு, அடங்கத் தொடங்குகிறது.

என்னுள் எழும் ஒவ்வொரு எண்ணத்தையும் நான் விசாரம் என்ற சோதனை இயந்திரத்தின் மூலம் பரிசீலிக்கும்போது, முழுமையான அமைதி கொள்ளும் காலம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. ஆரம்பத்தில் இந்தப் பேரமைதி சில விநாடிகளே இருக்கலாம். போகப்போக இந்த எண்ணம் சார்ந்த இடைவெளி பல நிமிடங்களாக அதிகரிக்கிறது. இந்தப் பயிற்சியின் முக்கியமான அம்சம் எது எனில், இந்தப் பேரமைதி நிலையை அடைய எது நமக்கு உதவியாக உள்ளது என்பதை உய்ந்து உணர்ந்து அறிந்து அதைப் பற்றிக் கொள்வது ஆகும். இதனை என்னால் வார்த்தைகளால் விவரிக்க இயலாது. ஏனெனில் இது வார்த்தைகளைக் கடந்த ஒன்றாகும். இது மனவெளியையும் கடந்த ஓர் உணர்வு. ஒவ்வொரு தீவிர சாதகனும் இதனை உணர முடியும்.

நான் எங்கு, எப்பொழுது இருந்தாலும், இந்த ஆத்ம விசாரம் என்னுடனே தொடர்ந்து இருந்து வந்தது. தெருவில் நடந்து கொண்டு இருந்தபோதும் சரி, டிரெயினில் அமர்ந்து இருந்தபோதும் சரி, ஒருநாளில் எனக்கு அத்யாவஸ்யமான செயல்களில் ஈடுபட்டு

இல்லாத எந்த சமயத்திலும் சரி — இந்த விசாரம் என்னுள் நிகழ்ந்துகொண்டே இருந்தது. ஆரம்பத்தில் சில மாதங்கள் வரை நான் 'நான் யார்?' என்ற கேள்வி என்னுள் எத்தனை முறை எழுகின்றது என்பதைக் கணக்கிட்டுக் கொண்டே இருந்தேன். எனக்கு வேலை ஏதும் அற்ற சிறிய கால இடைவெளியில் இந்த எண்ணிக்கையை மனத்துள் குறித்துக் கொண்டேன். ஓய்வு நேரம் நீண்டபோது இந்த எண்ணிக்கையை ஒரு நோட்டுப் புத்தகத்தில் குறித்துக் கொண்டேன்.

முதல் சில நாட்களில் இந்த எண்ணிக்கை 1000 என்பதே மிக உயரிய எண்ணிக்கையாக இருந்தது. மிக விரைவில் 7000 என்ற எண்ணிக்கையையும் தாண்டியது. பின்னர், எனது இருப்பின் ஒவ்வொரு கணமும் விசாரத்திலேயே மூழ்கிய தருணத்தில் எண்ணிக்கையே தேவையற்றுப் போனது. விசாரம் என்னும் ஆய்வுக் கருவி மனம் முழுமையும் நிறைந்தது. இந்த இடையறாக் கேள்வி. முயற்சி ஏதும் இன்றித் தானாகவே நிகழ ஆரம்பித்தது. இதில் முக்கியமான விஷயம் ஏது எனில் 'நான் யார்?' என்ற கேள்வியை மனது அல்லது வாய் மூலம் கேட்காமல் 'நான் யார்' என்பதை அறிய வேண்டும் என்ற தீவிர உந்துதலுடன் ஒவ்வொரு கணத்திலும் வாழ்தலேயாம்.

இந்த விசாரத்தின் பலன் கண்கூடாகத் தெரிய வந்தது. என் மனம் ஓர் அமைதிக் கடல் ஆனது. எனது சித்தம் செலுத்தும் வழியில் மனதையும் கட்டுப்பாடாக செலுத்த முடிந்தது. நான் என்னும் ஆன்மா, தனிப்பட்ட ஜீவன் என்பதல்ல; அதுவே அனைத்தையும் உள்ளடக்கியது என உணர முடிந்தது. ஒரு சராசரி மனிதன் தனது அறியாமையிலேயே ஆழ்ந்து இருக்கிறான். அவனது உடல், உணர்ச்சி மற்றும் மனம் — 'இவையே நான்' என்று எண்ணுகின்றான். ஓர் உயரிய ஆசானால் வழி நடத்தப்படும் சாதகன் இந்தப் பொய்மையை வெற்றி

கொள்கிறான். அவனது ஆன்மிகப் பரிணாமத்தில் இது ஒரு முக்கியமான மைல்-கல். இந்த ஆன்மிகத் தேடலில் இது அத்தியாவசியமான ஒரு நிலை. மனதினால் ஆளுமை செய்யப்பட்டு, உணர்ச்சிகட்கு அடிமையாக இருந்த நிலையிலிருந்து விடுபட்டு அவன் நேர்பாதையில் பயணிக்கத் தொடங்குகிறான்.

விசார வழியில் ஆன்மிகச் சார்பும் இப்போது தெளிவாக விளங்குகிறது. இந்த விசார வழியைப் பயன்படுத்தும்போது, உன்னுடைய உண்மையான ஐஸ்வர்யத்தை நீ அடைகிறாய்; வாழ்வின் ஆதாரத்தை நோக்கி விசார வழியில் செல்லும்போது இது சாத்தியமாகிறது. விசார வழியில் செல்லும்போது நாம் அடையும் இதர பலன்களைப் பற்றி வேறு சில அத்தியாயங்களில் நான் விவரித்து உள்ளேன். நம் வாழ்வின் மொத்தப் பிரச்சனையும் 'நான் யார்' என்பதை அவிழ்ப்பதிலேயே அடங்கி உள்ளது. ஒவ்வொரு சமயமும், ஒவ்வொரு ஆசானும், "ஜீவிதம் என்பது முடிவற்றது. அழிக்க ஒண்ணாதது" என்று குறிப்பிட்டுள்ளனர். அப்படி எனில், இந்த வாழ்வு என்பதுதான் என்ன?

முடிவற்ற வாழ்வு என்பது இடையறாத ப்ரக்ஞை உணர்வில் வாழ்வதே என்று விளக்குகிறார். தகுதிவாய்ந்த சீடனும் அதைப் புரிந்து கொள்கிறான்.

இத்தகு உயர்நிலையை எய்த வேண்டும் எனில் 'நான் யார்' என்ற பேருண்மையை நாம் அறிய வேண்டும். ஆத்மா எனும் ப்ரக்ஞை உணர்வு அழிவற்றது என்பதை உணர வேண்டும். இதுவே மனித வாழ்வின் குறிக்கோள். மற்ற எல்லாமே பயனற்றவை. இதனையே தியானிப்பாய். தியானம் ஆழ்ந்து செல்லச்செல்ல வெளி மனத்திற்கும்கூட இது புலப்படத் துவங்குகிறது.

ஏசு கிறிஸ்து கூறியபடி நல்லோர்க்கும் ஞானியர்க்கும் இறுதிப் புகலிடமாம் சுவர்க்க நிலை இதுவே.

அவர்கட்கு மரணம் என்பதே இல்லை. இந்த அகிலம் கண்ட மஹா ஞானியின் வாக்கின் பொருள் இப்போது புரிகின்றது அல்லவா!

வேறு ஒரு நிலையில் இருந்து நோக்கும்போது, ஓர் ஆன்மிக வளர்ச்சி பெறாத மனிதனுக்கு அடிக்கடி பிரக்ஞை உணர்வில் குறுக்கீடுகளும், துயரங்களும் அச்சமும் ஏற்படுகின்றன என்பது புலனாகின்றது. பெரும்பாலான மனிதர்கட்கு, அவன் அடையும் உயரிய ப்ரக்ஞை நிலை என்பதுகூட 'மனம்' என்கிற நிலையைத் தாண்டிச் செல்வதே இல்லை. அவன் மனம் — உணர்ச்சிகளின் அடிமையாகவே செயல்படுகிறான். மாயையின் பிடியில் சிக்கி மரணத்தை அடைகின்றான். பிறவி பிறவிதோறும் வெவ்வேறு வகையான ஜன்மங்கள் எடுத்து, தனது பூரண ப்ரக்ஞை உணர்வை முழுதும் அடையாமல் குறுக்கீடுகளும் தடைகளும் அவனது பரிமாணத்தைத் தடைசெய்ய அறியாமை என்னும் இருளில் மூழ்குகிறான். ஆனால் நமது ப்ரக்ஞை உணர்வு மனம் கடந்த உயர் நிலையை எய்தும்போது, என்றும் மாறாத — அழியாத பரம் — ஆத்மா என்னும் ப்ரக்ஞைக் கடலில் கரைகிறான். பகவானும் மறுபிறவி உண்டா என்ற வினாவிற்கு விடையிறுக்கும்போது, வியவஹாரிக நிலையில் இருந்து காணும்போது மறு ஜன்மம் என்பது இருப்பதாகத் தோன்றினாலும், பரமார்த்த சத்தியத்தில் மறுபிறவி என்பதே பொய்ம்மை என்று கூறுகிறார். அவரது உயரிய நிலையில் இருந்து காணும்போது, மரணம், மறுபிறப்பு இரண்டுமே மாயையே. அவை ஆன்மாவைப் பாதிப்பதில்லை. நமது உடல் நமது உடை மாற்றத்தால் பாதிக்கப்படாதது போன்று ஆத்மாவும் எத்தகைய வெளி மாற்றங்களாலும் பாதிக்கப்படாது. இந்த நேர்வழியை விசாரம் வெளிச்சம் காட்டி விளக்குகிறது.

ரமணாயனம்

க்ரேஸி மோஹன்

கிஷ்கிந்தா காண்டம்

நோக்கும் இடமெல்லாம் நாமின்றி வேறில்லை
பார்க்கும் எவற்றிலும் பேதமில்லை காக்கை
கருநாகம், மந்தி, கொடுஞ்சிறுத்தைக் கூட்டம்
குருரமண சீடர் குழு....(322)

பகவானின் சர்வ ஜீவ சமபாவத்தை இப்பாடல் எடுத்துரைக்கிறது.

யோ மாம் பஷ்யதி ஸர்வத்ர
ஸர்வம் ச மயி பஷ்யதி

என்னை எல்லாவற்றிலும் காண்கிறேன். என்னில் எல்லாவற்றையும் காண்கிறேன் என்று கண்ணன் கூறுவதை ஒத்து நோக்கும் இடம் எல்லாம் ஆத்மாவை அன்றி வேறு ஒரு பொருளும் இல்லை. எவற்றிலும் ஒரு பேதமும் இல்லை என்று பாடல் கூறுகிறது. காக்கை, பாம்பு, குரங்கு, சிறுத்தை அனைத்துமே பகவானின் சீடர்கள். ஆத்மாவின் பிரதிபிம்பங்கள்.

முதுகில் குரங்கு, முழந்தாளில் ஆடு
எதிரில் அணிலெனக்(கு) என்று புதிராகப்
பார்த்திருக்க ஒவ்வொன்றாய் வேர்க்கடலை ஊட்டியதைப்
பார்த்திருந்தால் பாரதியார் பாட்டு....(323)

குரங்கு, ஆடு, அணில் போன்ற பல உயிரெல்லாம் தன்னை அன்புடன் சூழ்ந்திருக்க, ஒவ்வொன்றிலும் பகவான் வேர்க்கடலை ஊட்டும் நிகழ்ச்சியை சித்திரம் போல் காட்டுகிறது இப்பாடல்.

நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்

என்ற பாரதி பாடலும்

காக்கை குருவி எங்கள் கூட்டம்

என்ற வரிகளும் நினைவிற்கு வருகின்றதல்லவா?

மேனியில் நாகம் மெதுவாக ஊர்ந்திடும்
ஞானிமுன் சித்திரமாய் நின்றிடும் காணின்
புலிவந்து திண்ணையில் பொய்யுறக்கப் பூனையாய்
மெலிதாக சொல்லும் மியாவ்....(324)

பகவானின் உடல்மேல் நாகம் ஊர்ந்திருக்கும். இதனை "அப்போது எப்படி இருந்தது?" என அன்பர் வினவியபோது, அச்சம் சிறிதும் இன்றி, "ஜில் என்று இருந்தது" என்றார் பகவான். விரூபாட்ச குகையில் இருக்கும்போது, புலி வந்து பகவான் எதிரில் அமர்ந்து அவரது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து செல்கிறது அல்லவா!

அமெரிக்க அன்பர் அகோஸ்டா கேட்டார்
சமரசம் சாத்தியமா சொல்வீர் அமரிக்கை
மேவ அமர்ந்த மனிதரே உம்மைப்போல்
தாவும் குரங்குமொன்று தான்....(325)

"அதெப்படி ஆறறிவு உள்ள மனிதனும் ஐந்தறிவு கொண்ட விலங்கும் ஒன்றாகும்?" என்று அமெரிக்க அன்பர் அகோஸ்டா கேட்டதற்கு, "அமைதியாய் அமர்ந்திருக்கும் அன்பரே! உண்மையில் தாவும் குரங்கும், அமர்ந்து இருக்கும் நீங்களும் பரப்பிரம்ம ஸ்வரூபமே" என்றார் பகவான்.

நாமொழிக்க நாமிங்கு ஞானிதான் என்கிறீர்?
ஏனுமக்கு சந்தேகம் என்றவர் நானிருந்தும்
நீரிருந்தும் ஆங்கே நமதுபணி யாளிருந்தும்
ஓரிருப்பு தானிங்(கு) உணர்வு....(326)

'நான்' என்னும் அஹங்காரம் நீங்கும்போது நாம் ஞானி என உணர்கிறோம் என்கிறீர்கள். இதில் உமக்கு இன்னும் சந்தேகமா? நான், நீங்கள், இங்குள்ள பணியாட்கள் அனைவரும் வேறுவேறாகத் தோன்றினும் உண்மையில் இருப்பதோ இருப்பு உணர்வு ஒன்றே.

விலங்கு, மனித, விருட்ச விதங்கள்
விளங்கும் பலவான வீம்பு விலங்காய்
ஒருமை உணர்வை ஒதுக்கிடப் பூட்டும்
வெறுமை விடுதலை வீடு....(327)

விலங்கும், மரங்களும், மனிதனும் ஆகப் பலவிதமாகத் தோன்றும் அனைத்துமே நாம் அனைவரும் ஒரே ஆத்மா. இருப்பது ஒன்றே ஒன்றுதான் என்ற பேருண்மையை ஒதுக்கி, அவித்தையினால் ஏற்படும் பல்வேறு தோற்றங்களில் சிக்குவதால்தான் இந்த வேற்றுமை உணர்வை விட்டால் கிடையாது முக்தி.

வாடும் பயிர்கண்டு வாடிய வள்ளலார்
பாடுமப் பண்பே பவித்திரம் ஓடும்
உயிரடையும் ஓர்நாள் ஒருமைக் கடலை
தயிர்கடைய வெண்ணெய்த் திரள்....(328)

இந்த ஒருமை உணர்வை "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" என்று வள்ளலார் பாடியதை பகவானும் சுட்டிக்காட்டுகிறார். அனைத்து உயிர்களுமே ஒருநாள் ஒருமை உணர்வு என்ற மஹா சமுத்திரத்தில் ஒன்றாகக் கரைந்து விடும். தயிர் கடைய வெண்ணெய் திரள்வதுபோல், மனத்தை விசாரம் என்னும் மத்தால் கடைய, பேதம் நீங்கி, அனைத்தும் ஒன்றே என்ற ஞானம் தோன்றும்.

மந்திமொட்டைப் பையனை மற்ற குரங்குகள்
தொந்திரவு செய்ய தவம்செய்து வந்தவனைக்
கண்டால் மிரண்டு கவிகள் நடுங்கியதாம்
உண்டாம் அதற்கும் உணர்வு....(329)

இந்தப் பதினேழு வயது பாலகன் உண்மையில் கடவுளின் வடிவம் என்று குரங்குகளும் அறிந்து, ரமணன் எதிரில் தம் சேட்டை அனைத்தும் ஒடுங்கி, சாந்தமாய் அமர்ந்தன.

பட்சணம் தன்னை பறிகொடுத்த வர்க்குமந்தி
லட்சணம் சொன்னார் லயித்துமகான் லட்சிய
நோக்கிது போலவே நோக்குமிருந் தால்ஞானம்
பார்க்கலாம் தாவிப் பறித்து....(330)

கையில் இருந்த பட்சணத்தைக் குரங்கு தாவிப் பறிக்க, பறிகொடுத்தவரிடம் பகவான் கூறியது. "லட்சியத்தில் தீவிரப் பற்றுடன் முயன்றால், குரங்கு பட்சணத்தைத் தாவிப் பறித்ததுபோல் பறித்து விடலாம்."

நொண்டிக் குரங்குவெகு நட்பாம் ரமணருக்கு
சண்டித் தனம்செய்ய சாப்பிட கண்டித்த
வர்கரத்தைப் பாய்ந்து வாயால் கடித்திட
தற்பரம் தண்டனை தீர்ப்பு....(331)

நொண்டிக் குரங்கு ஒன்று சண்டித்தனம் செய்தபோது பகவான் கண்டித்தார். உடனே அது பகவானின் கரத்தைக் கடித்துவிட்டது. பகவான், "நீ என்னிடம் இனிமேல் வராதே! இதுதான் நான் அளிக்கும் தண்டனை" என்றார்.

தீர்ப்பாக ஓரிருநாள் பார்க்கா திருந்திட
ஆர்பாட் டமடங்கி அம்மந்தி பார்ப்போர்
வியக்கக் குழைந்தவர் வீராப் படங்க
புயத்தில் அமர்ந்தது போய்....(332)

அதைத் தொடர்ந்த சில நாட்கள் அக்குரங்கு அருகில் வந்தபோதும் பகவான் பாராமுகமாய் இருந்தார். 'பகவான் சந்நிதி நெருக்கம் இல்லையே!' என்று மனம் வருந்திய குரங்கு, தன்னுடைய வீராப்பு எல்லாம் அடங்கி, பகவான் தோளில் போய் அமர்ந்தது.

பணியாய் மனிதர்க்கு போன குரங்கு
இனிவனம் சென்றால் எதிர்ப்பு எனினும்
ஆரண்யம் சென்றரசன் ஆனவன் வந்தனன்
காருண்யர் விஸ்வாசம் கொண்டு....(333)

மனிதருடன் சேர்ந்திருந்த நொண்டிக் குரங்கை, இனி நம் கூட்டத்தில் சேர்க்க மாட்டோம் என்ற காட்டுக் குரங்குகள் எதிர்த்த போதும் அவற்றை வெற்றி கொண்டு குரங்குகளின் அரசனாய் திரும்பி வந்த நொண்டி, பகவானிடம் மீண்டும் விஸ்வாசத்துடன் வந்தான்.

கொண்ட மனையாள்கள் குட்டிகள் சூழ்ந்திட
நொண்டி ரமண தரிசனம் கொண்டதைக்
கண்டவர்கள், ராமனை கிஷ்கிந்தா காண்டத்தில்
கண்டபலன் கொண்டார் களித்து....(334)

காட்டிலிருந்து மனைவிகள், தனது குட்டிகள் புடைசூழ, நொண்டிக் குரங்கு பகவானைத் தரிசிக்க வந்ததைக் கண்டவர்கள், ராமாயண கிஷ்கிந்தா காண்டத்தில் சுக்கிரீவன் தனது குடும்பமும், வானர சேனைகளும் புடைசூழ வந்து ராம தரிசனம் செய்ததை நினைவு கொண்டனர்.

கல்லெறிந்தோர் அன்பர் குரங்கொன்றைக் கொன்றிட
சொல்லறியா சோகத்தில் சூழ்ந்தயினம் சொல்லியதாம்
போன சிதையை பகவானின் முன்வைத்து
ஆன கதையை அழுது....(335)

ஒரு அன்பர் கல்லெறிந்து குரங்கு ஒன்றினைக் கொன்றுவிட, துக்கத்தில் ஆழ்ந்த குரங்கினம், பகவானின்முன் இறந்த குரங்கை வைத்து ஆழ்ந்த சோகத்தில் கதறின.

அழுத குரங்குகள் ஆறுதல் பெற்று
தொழுது வணங்கித் திரும்ப பழுது
விளைவித்த அன்பர் விழுந்தாராம் நோயில்
கிளைசுற்றம் கேட்டது காப்பு....(336)

பகவானின் அருள்நோக்கால் குரங்குகள் ஆறுதல் பெற்றுத் திரும்பின. உடனே, குரங்கினைக் கல்லெறிந்து கொன்ற முஸ்லீம் தீர இயலாத நோயில் விழுந்தார்.

காப்புத் திருநீறாய் பாப்பார சாமியிவர்
சாப்பாட் டடுப்படி சாம்பலிட ஆ!பார்
அசலான அற்புதம் முசல்மான் அன்பரெழுந்(து)
அசலாமா லேகும் அழைப்பு....(337)

நமது தோழர் குரங்கினைக் கொன்ற பிழையின் விளைவுதான் இது. அது பகவான் கை விபூதியால் மட்டுமே குணமாகும் என்று தீவிரமாய் நம்பிய முஸ்லீம் அன்பர்கட்கு, பகவான் அடுப்புச் சாம்பலையே திருநீறாய் அளிக்க, அற்புதமாய் அந்த முஸ்லீம் உடல் குணமாகி எழுந்தார்.

தாகம் தவமாக, தண்ணீர் ரமணராக
காகம் கிணற்றங்கால் கொம்பில் யாகமாய்
மூன்றுநாள் மூச்சடக்க மோட்சம் அளித்தெடுத்தார்
சான்றாய் சமாதியும் செய்து....(338)

காகம் மூன்றுநாள் கிணற்றுமேலே, உணவும் நீரும் இன்றி, தவம் செய்வதுபோல இருக்க, பகவான் தன் திருநோக்கால் அதற்கு முக்தி அளித்தார்.

செய்யுமோ மெய்த்தவம் சிந்தை அதற்குண்டோ
உய்யுமோ மோட்ச உலகுக்கு அய்யமாய்
சொன்னவர்க்கு சொன்னார் சிறகுடைய காக்கைக்கும்
தன்னான்மா பொன்னான்மா தான்....(339)

சிலர்க்கு சந்தேகம் வந்திருக்கலாம். தவம் செய்ய மனம், ஞானம், எதுவுமே இல்லாத காகத்திற்கும் முக்தி எப்படி வரும? இதற்கு ஸ்ரீதர்சன விளக்கமாக, ஆத்ம சாட்சாத்காரம் அளித்துக் காட்டியவர் பகவான்.

அன்பர் குளிக்கும் அடவிக்கு நீரருந்த
வன்புலி வந்திட வாஞ்சையாய் நண்பரே
இன்றுபோய் நாளைவா என்றதும் அச்சிறுத்தை
கன்றுபோல் சென்றதாம் காண்....(340)

பக்தர் குளிக்கும் அருவிக்கு நீர் அருந்த ஒரு சிறுத்தை வந்தது. பக்தர்கள் அஞ்சி ஓடினர். அதனை நோக்கி அன்புடன், "இவர்கள் எல்லாம் அஞ்சுகிறார்களே! இன்று திரும்பிப் போய் இவர்கள் இல்லாத சமயம் நாளைக்கு வா" என்றார் பகவான்.

வாதுமைக் கண்களால் வாத்சல்ய மாய்ரமண
சாதுவைப் பார்க்குமாம் சாப்பிடும் போதினில்
கோவிந்த லஷ்மி கடாட்சத்தால் ஆசிரமம்
ஓவென்(று) உயர்ந்ததென்பார் தேவு....(341)

பசு லட்சுமி பகவான் கையால் உணவு பெறும்போது தனது அழகிய கண்களால் பகவானை நோக்கும். "இதுவே லட்சுமி தேவி! இதன் கடாட்சத்தினால்தான் ஆசிரமம் பல்கிப் பெருகுகிறது" என்றார் பகவான்.

ஆவென்று வாய்பிளந்து ஆசிரமம் பார்த்திருக்க
ஆவன்று தேவன் அனுக்ரகத்தால் சாவென்ற
சூட்சுமம் தாண்டி சுயநினை வோடுமுக்தி
மோட்சம் புகுந்ததுடல் மாய்த்து....(342)

ஆசிரம அன்பர் அனைவரும் ஆச்சரியமாய் பார்த்திருக்க, பகவான் திருக்கரம் தீண்டி இருக்க, பிறவித் தளையை நீங்கி, சுயநினைவோடு, உடல் நீங்கி முக்தி அடைந்தது அப்பசு லட்சுமி.

ஆயி சமாதிக்(கு) அருகே பசுவுக்கு
கோயில் எழுப்பினார் குருநாதர் ஆயினும்
ஏனைய பேருக்காய் ஆனை கஜேந்திரன்
வானை அடைந்ததாய் வாக்கு....(343)

தனது தாயின் சமாதிக்கு அருகில் லட்சுமிக்கும் பகவான் சமாதி எழுப்பினார். கஜேந்திரன் என்கிற யானைக்குத் திருமால் முக்தி அளித்ததுபோல் பசுவிற்கு பகவான் அளித்த முக்தி வைபவம் தேவலோகத்திற்கும் எட்டி இருக்கும்.

அக்ஷர மணமாலை ஒரு தத்துவக் கருவூலம்

டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன்

பகுதி-15

இறைவனை அறிதல் என்பது ஞானிகளும் பக்தர்களும் பெரிதும் விரும்பும் பேரின்ப நிலை. மக்களை இந்தப் பாதையில் வழி நடத்தப் பல்வேறு சித்தாந்தங்கள் உலகில் தோன்றின. பல மதத் தலைவர்கள் தத்தம் கருத்துகளை மக்களிடையே பரப்பினர். ஆனால் அந்தப் பரம்பொருள் அத்தனை எளிதில் சிக்குவதில்லை. அது மிகப் பெரிய ஒரு பரிமாணத்தில் அமைந்துள்ளது. அதன் பெருமையை எளிதில் உணர இயலாது என்று ரிக் வேதம் சொல்கிறது. சிவனைப் பற்றிப் பாடுகையில் திருமூலர் அவன் மிக உயர்ந்தவன், பர அபர ஞானங்களைப் படைத்தவன், சாத்திரங்களின் அறுதியானவன் என்று சுட்டிக் காட்டுகிறார். 'பரனாய்ப் பராபரம் காட்டி உலகில் .... உரன் ஆகி ஆகமம் ஓங்கி நின்றானே' (திருமந்திரம் 61). இத்தகைய பரம்பொருளை எப்படி அறிவது? இதற்கு 'அறிதல்' என்னும் செயல் பற்றிய தெளிவு வேண்டும். அத்வைதத்தில் ஆறு விதமாக நாம் ஒரு பொருளை அறியலாம் என்று சொல்லப்படுகிறது. இது மிகவும் ஆழமான தத்துவம். இதை அடிப்படையாக வைத்து எல்லாவிதமான ஞானத்தையும் அறியலாம். இதைப் ப்ரமாணம் என்று சாஸ்திரம் சொல்லும்.

முதல் வகை **ப்ரத்யக்ஷ ப்ரமாணம்** எனப்படும். கண்-காது-மூக்கு-நாக்கு-தோல் என்னும் ஐந்து ஞானேந்திரியங்களால் உணரப்படுபவை இந்த வகையில் சேரும். இது மிகவும் அடிப்படையான

நிலை. மற்ற எல்லாவித அறிவுக்கும் ஆதாரம் இதுவே. இத்துடன் கால்-கை போன்ற கர்மேந்திரியங்களும் மனம்-அறிவு என்னும் சூக்ஷ்ம இந்திரியங்களும் சேர்ந்து நம்முடைய எல்லாவித செயல்களையும் இயக்குகின்றன. சாதாரணனும் ஞானியும், பணக்காரனும் ஏழையும், இளைஞனும் முதியோனும் இவ்வகையிலேயே செயலாற்றுகின்றனர்.

அடுத்தது **அநுமானம்** எனப்படும். இதில் ஒரு வஸ்துவால் இன்னொன்றை ஊகிக்க இயலும். வேதாந்தத்தில் இதற்கு உதாரணமாக மலையுச்சியில் காணப்படும் புகையைச் சொல்லுவர். புகையிருந்தால் அதற்குக் காரணமாக நெருப்பும் இருக்கும் என்று உணரமுடியும். இதற்கு இரண்டு சாதனங்கள் தேவை. ஒன்று இந்திரியங்களால் உணரப்பட்ட வஸ்து. அது, இங்கு கண்ணால் பார்க்கப்பட்ட புகை. இரண்டாவது அதனோடு சம்பந்தப்பட்ட — ஆனால் இந்திரியங்களால் உணரப்படாத, நெருப்பு என்னும் சாதனம். நெருப்பு இல்லாமல் புகை அசாத்தியம் என்ற ஞானம் முன்பே இருந்தால் அன்றி, இந்த சம்பந்தத்தை அவன் உணர மாட்டான். இதற்கு வ்யாப்தி என்று பெயர். ஒன்றினால் மற்றொன்றை உணருதல் இந்த வகைப் ப்ரமாணத்திற்கு அடிப்படை லக்ஷணம். மற்றுமொரு லௌகீக உதாரணத்தைப் பார்க்கலாம். ஒருவன் வண்டியில் செல்கிறான். தூரத்தில் உச்ச ஸ்வரத்தில் சிலர் எழுப்பும் குரலொலி கேட்கிறது. சொற்கள் தெளிவாக இல்லை. ஆயினும் அந்த ஒலியின் தாக்கத்தால் அங்கு ஏதோ கலவரம் என்று ஊகிக்கிறான். முன்பு இவ்வாறு ஓசை கேட்டபோது ஏதோ பிரச்சினை நிகழ்ந்தது அவன் நினைவுக்கு வருகிறது. அந்தப் பக்கம் போகாமல் திரும்புகிறான். இவ்வாறு முதல் செய்கையில் கண் என்னும் இந்திரியத்தால் அவன் புகையைப் பார்க்கிறான், முன் அநுபவத்தால் நெருப்பை அனுமானிக்கிறான். இரண்டாவது செய்கையில், காது

என்னும் இந்திரியத்தால் கோஷத்தைக் கேட்கிறான், கலவரத்தை சம்பந்தப் படுத்துகிறான். இது அடிக்கடி நிகழும் ப்ரமாணம்.

மூன்றாவது சப்தப் ப்ரமாணம். ஆசாரியன் மூலமாகக் கிடைக்கும் அறிவு. இதற்கு ப்ரத்யக்ஷமும் அநுமானமும் தேவையில்லை. இன்றைய காலகட்டத்தில், நூலைப் படித்துப் பெறும் அறிவும், இண்டர்நெட் போன்ற சாதனங்களால் கிடைக்கும் ஞானமும் இந்த வகையில் சேருகின்றன.

அநுமானப் ப்ரமாணத்துடன் தொடர்புடைய, ஆனால் பெரிதும் மாறுபட்ட ப்ரமாணம், அர்த்தாபத்தி ப்ரமாணம். இதில் மற்ற ப்ரமாணங்களுடன் தொடர்புடைய ஒரு நிகழ்வு, மாறுபட்ட ஒரு அறிவை அளிக்கிறது. இக்காலத்திற்கு ஏற்றவாறு ஒரு உதாரணத்தால் இதை விளக்கலாம். ஒருவன் இரவு முழுவதும் உறங்காமலே தொழிற்சாலையில் இருக்கிறான். ஆனால் அவன் உற்சாகத்துடன் ஆரோக்யமாகக் காணப்படுகிறான். அவனை இரவில் மட்டுமே பார்ப்பவன், 'அவன் உறங்காமல் இருந்தால் இத்தகைய உற்சாகத்துடன் இருக்க இயலாது, அதனால் இரவில் உறங்காத காரணத்தால் பகலில் உறங்குவான்' என்று தீர்மானம் செய்கிறான். இது ஒருவித அநுமானம். ஆனால் நேரடித் தொடர்பு இல்லாதது. புகை-தீ என்பது போன்ற சங்கிலித் தொடர்பு அற்றது. 'இண்டலிஜண்ட் கெஸ்' என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே அது போன்றது. அவனுடைய அறிவாற்றல் அநுபவம் போன்றவற்றால் அவன் இதை உணர்கிறான்.

அநுபலப்தி என்பது ஒருவகை எதிர்மறை ஞானம். ஒரு வஸ்து இருப்பதால் மட்டுமல்ல, அது இல்லாதபோதும் ஞானத்தை அடைய வாய்ப்பு உண்டு என்பதைக் குறிக்கும். கைப்பையில் சாவியைத் தேடுகிறோம். அது அங்குக் கிடைப்பதில்லை.

அது அங்கில்லை என்று உணர்வது ஒருவித அடிப்படை அறிவு. ஒரு மலரை முகர்கிறோம். அதில் மணமில்லை. இது மற்றொரு வித அறிவு. ஏதோ ஒன்றைத் தேடுகிறோம். அது இல்லாது இருத்தல் அநுபலப்தியாகும்.

உபமாந ப்ரமாணம் என்பது நாம் பார்க்கும் ஒரு பொருளை அதைப் போன்ற மற்றொன்றுடன் ஒப்பு நோக்கிப் பார்த்தல் ஆகும். இது ஒரு குறிப்பிட்ட அளவில் நமக்குப் பயன்படும்.

வேதாந்தம் இந்தப் ப்ரமாணங்களை ஒரு அடிப்படை ஆதாரமாக அமைத்துக் கொடுக்கிறது. இதை மேலும் விரிவுபடுத்தி ஒரு தத்துவ மாளிகையை எழுப்பும் பணி நம்முடையது. இதில் நாம் வேதாந்த எல்லைக்குள் சற்று கற்பனைக் குதிரையை செலுத்தி நம் எண்ணங்களை விசாலப் படுத்தலாம். இந்த முறையில் இத்தகைய ப்ரமாணங்கள் எவ்விதம் இறைவனை அடைய உதவும் என்பதை அறிய முற்படுவோம்.

ப்ரத்யக்ஷ ப்ரமாணம்:

இறைவனின் அடியார்கள் அவனுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள். அவனை அடைவதே வாழ்வின் பேறு என்பது அடியார்களின் நோக்கம். அறுபத்திமூவர் எனப் போற்றப்படும் நாயன்மார்கள் இதற்குத் தலைசிறந்த எடுத்துக்காட்டு. இறைவன் அருளால் பசி நீங்கப்பெற்ற சம்பந்தன் என்னும் ஞானக் குழந்தை, அந்த சிவனைப் பற்றி ‘காடுடைய சுடலைப் பொடிபூசி என் உள்ளம் கவர் கள்வன்’ என்று அநுபவித்துப் பாடுகிறது. புனிதவதி என்னும் அழகிய பெண்மணி, தன் அழகை வெறுத்து இறைவனை வேண்டிப் பேயுருவம் பெற்று, காரைக்கால் அம்மையார் எனப் போற்றப் படுகிறார். திருவாலங்காட்டில் இடுகாட்டில் ஆண்டவனின் தாண்டவத்தைக் காணும் பேறு பெறுகிறாள். இவ்வாறு

மாறுபட்ட ப்ரத்யக்ஷத்தில் இவர்கள் இறைவனைக் காண்கின்றனர். இதன் மற்றொரு பரிமாணம் அடியாரிடம் ஆண்டவனைக் காணல். அப்பூதி அடிகளார், பக்தருக்குப் பணி செய்வதே பரமன் பணி என்று கருதி நாவுக்கரசுப் பெருமானையே தெய்வமாகக் கொண்டு வாழ்ந்தார். மதுரகவி ஆழ்வார் பெருமாளைப் பாடாமல், நம்மாழ்வார் என்னும் அந்தத் தலைசிறந்த விஷ்ணு பக்தரைப் பாடுவதே வாழ்வின் நோக்கமாகக் கொண்டார். (இங்கு வேறு ஒரு செய்தியையும் காண முடிகிறது. அப்பூதி அடிகளாரும், மதுரகவி ஆழ்வாரும் அந்தணர் மரபில் உதித்தவர்கள்; அப்பரும், நம்மாழ்வாரும் வேறு மரபைச் சேர்ந்தவர்கள். பக்தி வழியில் சாதி வேற்றுமைகள், உயர்வு-தாழ்வுகள் மறையும் உன்னதப் பெருமையைக் இங்கு காண்கிறோம்!!)

இத்தகைய ப்ரமாணத்தில் எல்லாச் செயல்களும் ஆண்டவன்பால் அமைய வேண்டும் என ஞானிகளும் பக்தர்களும் விரும்பினர். கண்கள் அவனை நோக்க, செவி அவன் சொல்லமுதம் பருக, வாய் அவன் மாளாப்புகழ் பாட, உடல் அவன் பணி புரிய, என் எல்லா உணர்வுகளும் அவனைப் பற்றியே அமையட்டும் என்று ஆதிசங்கரர் திருச்செந்தூர் திருத்தலத்தில் முருகன் புகழ் பாடுகிறார் (சுப்ரமண்ய புஜங்கம்). ஆனால் இதற்கும் ஒருபடி மேலே சென்று அவனைக் கண்டும் திருப்தி அடையாமல் இருந்த பக்தர்களும் உண்டு. தன்னைக் காண வந்த பெருமானுக்கு 'திருஷ்டி கழிக்க' திருப்பல்லாண்டைப் பாடிய பெரியாழ்வார் இதற்குச் சிறந்த உதாரணம்.

மேலே கண்ட எல்லா உதாரணங்களிலும் இறைவனுடனோ, அல்லது அவன் அடியார்களுடனோ நமக்கு நேரடித் தொடர்பு ஏற்படுகிறது.

அநுமானம்:

இதில் நேரடித் தொடர்பு இருப்பதில்லை. ஆனால் பரம்பொருளை வேறு பல காரணங்களால் ஊகிக்க இயலும். வாகீசர் சுண்ணாம்புக் காளவாயில் சமணர்களால் அடைபடுகிறார். உடல் கருகி அழியவேண்டிய சூழல். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை. மாறாக எல்லா அவயவங்களும் குளிர்ந்து இருக்கக் கண்டார். காரணத்தை அலசுகிறார். இதற்குக் காரணம் எதுவாக இருக்கலாம் என்று அநுமானிக்க முடிகிறது. 'ஈசன் எந்தை இணையடி நீழலே' என்று முடிவு கட்டுகிறார். அவர் வாழ்வில் வேறொரு சம்பவமும் நடக்கிறது. சமணர்கள் அவரைப் பாறாங்கல்லில் கட்டி கடலில் தள்ளிவிடுகிறார்கள். ஆனால் அதுவே அவரை படகு போல ஏந்தி வருகிறது. 'நம சிவாய'மே காரணம் என உணர்கிறார் அப்பெருந்தகை.

> சொற்றுணை வேதியன் சோதி வானவன்
> பொற்றுணை திருந்தடிப் பொருந்தக் கைத்தொழ
> கற்றுணைப் பூட்டியோர் கடலிற்பாய்ச்சினும்
> நற்றுணையாவது நமசிவாயவே.

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் நிகழ்வு. 'நம சிவாய' நாமத்தின் மேல் அவர் கொண்ட அளவற்ற நம்பிக்கை அவருக்கு மிகக் கடுமையான சோதனைகளிலும் தோன்றாத் துணையாக அமைகிறது. இத்தகைய நிகழ்வுகள் பலவற்றை சைவ-வைணவ மரபில் பார்க்க இயலும்.

உபமாந ப்ரமாணம்:

இந்திய தத்துவ அமைப்பில் இது ஓர் சிறந்த உக்தி. தாயைக் கொண்டு கடவுளைக் காட்டிய அற்புத மரபு. 'அம்மையே அப்பா ஒப்பிலா மணியே' என்று மணிவாசகர் சிவனை அழைக்கிறார். அழகிய

ஒரு காட்சியால் இதை விளக்கலாம். கயிலாய யாத்திரை செல்ல விரும்பிய வாகீசர், இறைவனின் அருட்கடாட்சத்தினால், திருவையாறில் ஒரு குளக்கரையை வந்தடைகிறார். உள்ளத்தில் ஏமாற்றம், யாத்திரை கைகூடவில்லையே என்று. ஐயாரப்பன் ஆலயத்தை நோக்கிச் செல்கிறார். வழியில் ஒரு சோலை. அங்கு அநேக விலங்கு, பறவை இனங்களைப் பார்க்கிறார். அவையே இறைவனாகக் காட்சிதர, அவருக்குப் புதியதோர் அறிவு கிட்டுகிறது. 'கண்டேன் அவர் திருப் பாதம், கண்டறியாதனக் கண்டேன்' என்று பரவசத்துடன் பாடுகிறார். இறைவன் வேறெங்கும் இல்லை; நாம் காணும் இச்சூழலிலேயே அவன் உள்ளான் என்ற பேரறிவு கிட்டுகிறது.

பாரதியார் காக்கைச் சிறகினிலே அவன் கரிய நிறம் கண்டார். மரங்களில் அவன் பச்சை நிறத்தைப் பார்த்தார். கேட்கும் ஒலியெல்லாம் அவன் இசைக்கும் கீதமாயிற்று. அது மட்டுமா, தீக்குள் விரலை வைத்தால் நாம் அதன் தாங்க இயலாத சூட்டை மட்டுமே உணர்வோம். அவரோ அவனைத் தீண்டும் கொள்ளை இன்பத்தை அடைகிறார். அவனே குருவாக, சீடனாக, தாயும் தந்தையுமாக, அரசனாக சேவகனாக, காதலனாக, கண்ணம்மா என்னும் காதலியாக — அவருக்குத் தோன்றியதற்குக் காரணம் அவருடைய அபூர்வ பக்தி உணர்வே.

சப்தப் ப்ரமாணம்:

இது குருவினிடமிருந்து கற்றலாலும், நூலறிவாலும் ஏற்படும். மிகவும் ஏற்றமான முறை. மேலான தத்துவத்தைக் கற்க ஏற்ற வழி. உபநிஷதங்கள் வலியுறுத்தும் நெறி. படிப்பு என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும் செய்வதல்ல; கற்றலும் அதைப் பரப்புதலும் தொடர்ந்து செய்ய வேண்டிய ஒரு பணி என்று தைத்திரிய உபனிஷதம் சொல்கிறது. (ஸ்வாத்யாய

ப்ரவசனாப்யாம் ந ப்ரமதிதவ்யம்). 'கற்றபின் நிற்க அதற்குத் தக' என்னும் குறளோவியமும் இதையே குறிப்பிடும். இந்திய மரபில் குருகுல வாசமும் சான்றோரைக் கௌரவிப்பதும் பெரிதும் காணப்படும் வாழ்க்கை முறை. இதற்காக பிரம்மசரியம் என்னும் ஒரு கால கட்டத்தையே நம் சமூகம் அமைத்தது குறிப்பிடத் தக்கது. ஞான வழியில் முன்னேற இது மிகச் சிறந்த வழி.

அநுபலப்தி:

ஒரு பொருள் இல்லை என்று அறிவதும்கூட ஒருவித ப்ரமாணமாகும். குலசேகரப் பெருமான் சிறந்த பக்தர் மட்டுமல்ல, அற்புதமான கவியும் கூட. கற்பனை வளம் கொண்ட இவர் பாடல்கள் படிப்போர் உள்ளங்களை எல்லாம் கவரக் கூடியவை. இவர் பதினோரு பாடல்களில் தேவகி என்ற தாய் உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறார். பெற்றது தேவகி; ஆனால் அவள் ஒரு நாள்கூட குழந்தையைக் கொஞ்சியதில்லை. அதனுடன் விளையாடியதில்லை. ஆனால் அத்தனையையும் அநுபவித்தவள் யசோதை. இதைச் சற்று பொறாமை கலந்த உணர்வோடு தேவகி கூற்றாக குலசேகரர் வருணிப்பது கொள்ளை அழகு.

.....வெகுளியாய் நின்று உரைக்கும் அவ்வுரையும்
திருவிலேன் ஒன்றும் பெற்றிலேன்;
எல்லாம் தெய்வ நங்கை யசோதை பெற்றாளே
(பெருமாள் திருமொழி- ஆலை நீள் கரும்பு-5)

அவளும் வசுதேவனும் தேடி அடையாத பேறு, யசோதை-நந்தகோபன் பெறுகின்றனர். இதை, தேவகி வாக்காக அவர் சொல்லும் அழகே அலாதி.

நந்தன் பெற்றனன்; நல்வினை யில்லா
நங்கள்கோன் வசுதேவன் பெற்றிலனே
(பெருமாள் திருமொழி- ஆலை நீள் கரும்பு-3)

இந்த உணர்வு, வாழ்வில் நாம் பலரும் அடிக்கடி உணரும் ஒன்றாகும். இந்திரியங்களால் ஏற்படும் பற்றுகளும், அதன் விளைவான தேடலும், அதன் பயனாகத் தோன்றும் காமக் க்ரோத சகதிகளும், இறுதியில் ஏற்படும் விரக்தியும் சம்சாரியின் வாழ்வில் சகஜம். தேடிய பொருள் கிடைத்தாலும், கிடைக்காமலே போனாலும், நமக்கு மிஞ்சியது துயரமே என்பதை அறிகிறோம். பட்டினத்தார் போன்ற மகான்களின் வாழ்விலும் இதைப் பார்க்கிறோம். ஏன் நம் அனைவரின் அநுபவமும் இதுவேயாகும்.

அர்த்தாபத்தி:

இது சற்று வேறுபட்ட ஒரு நிலை. மற்ற ப்ரமாணங்களுடன் தொடர்புடைய ஒரு நிகழ்வு, மாறுபட்ட ஒரு அறிவை அளிக்கிறது. இது சற்று ஆராய்ந்து அறிய வேண்டிய ஒன்று. நாம் முதலில் பெறும் அறிவு, ஸ்தூலமானது. அதையே சூக்ஷ்மமாகப் பார்த்தால் அதன் முழுப் பொருளையும் அடைய இயலும். நாயன்மார்கள் பலர் வாழ்வில் இந்த வகை அறிவின் ஒரு சில மறைமுகப் பரிமாணங்களைக் காணலாம். விறன்மிண்ட நாயனார் வீரம் மிக்கவர். (விறன்=வீரம்). அடியார்கள்பால் பேரன்பு கொண்டவர். யாரும் அடியார்மீது குற்றம் செலுத்த ஒண்ணார். இவர் இருக்கும் திருவாரூருக்கு வந்த சுந்தரமூர்த்தி நாயனார், ஆலயம் செல்லும் வழியில் சிவனடியார்கள் பலர் அமர்ந்திருப்பதைக் காண்கிறார். அடியாரை வணங்கும் தகுதி தமக்கில்லை என்னும் பணிவுடன், அவர்களை மனதால் மட்டும் வணங்கி ஒதுங்கிச் செல்கிறார். அதை உணராத விறன்மிண்டர் இவர் அடியாரை மதிக்கவில்லை என்று எண்ணுகிறார். சினத்துடன், 'இந்தச் சுந்தரரும், அவனை ஆட்கொண்ட சிவபெருமானும்கூட அடியாருக்குப் புறம்பானவர்கள்.' என்று உரத்த குரலில் கூற, அதனால் துயருற்ற சுந்தரர்

‘தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கு அடியேன்’ என்று துவங்கும் திருத்தொண்டத் தொகையைப் பாடுகிறார். அதுவே பின்னர் பெரிய புராணம் தோன்றக் காரணமாகிறது. விறன்மிண்டரும் சுந்தரப் பெருமானின் அடியார் பக்தியை உணருகிறார்.

கிருஷ்ணனை அநுபவித்தவர்களில் சிறந்தவர் நாராயண பட்டத்ரியவர்கள். கேரள தேசத்தவர். தன் குருவின் வாத நோயை அவர்மீது கொண்ட பக்தியால் இவர் வாங்கிக் கொள்கிறார். ஆனால் நோய் அவரை வாட்டி வதைக்கிறது. தாங்கமாட்டாமல் இவர் குருவாயூர் தலத்தில் உறையும் வாதபுரீசனை சரணடைகிறார். அவன் குணங்களையும் லீலைகளையும் நாராயணீயம் என்னும் நூலில் நூறு அத்தியாயங்களில் வருணிக்கிறார். இவை தசகங்கள் எனப்படும். இந்த நூலை ஸ்ரீமத் பாகவதத்தின் சுருக்கம் என்றே பலரும் கருதுகின்றனர். இதில் கண்ணனின் வாழ்க்கையை அழகிய ஸ்லோகங்கள் வடிவில் பார்க்கலாம்.

அவர் கண்ணனின் ராசக்ரீடையை பல அத்தியாயங்களில் விவரிக்கிறார். அதில் அந்த நடனக் காட்சி வைபவத்தைச் சொல்லும்போது உபநிஷதங்களே அந்த அழகிய இடைப் பெண்களின் வடிவில் வந்தன என்று பொருள் கொள்ளக் கூடிய ஒரு விளக்கத்தை அளிக்கிறார். சிருங்கார ரசத்தை அடிப்படையாகக் கொண்ட அந்தப் பகுதியின் உள் உறைப் பொருளாக ஒரு அத்புத வேதாந்த விளக்கை ஏற்றி வைக்கிறார் பட்டத்ரி. கதையின்படி அவன் வேணு கானத்தைக் கேட்டு கன்னிப் பெண்கள், மணமானவர்கள், தாய்மார்கள், முதிர்ந்த பிராயமுடையவர்கள் எனப் பல தரப்பட்டவர்கள் தங்கள் வீட்டு வேலைகளையெல்லாம் மறந்து, துறந்து தன்னையறியாமல் ஓடோடி வருகின்றனர். இவர்கள் காம இச்சையாலோ நடனம் ஆடி கேளிக்கைகளில் ஈடுபடவோ வருவதில்லை.

கற்பில் சிறந்த அப்பெண்டிர் அவனைத் தம் வாழ்வின் பயனாக, இந்த ஜீவாத்மா இத்தனைக் காலம் தேடித்தேடி அலுத்துப்போன, பரம்பொருளாகக் காண்கின்றனர். அந்த நடனம் ஜீவாத்ம-பரமாத்ம ஐக்கியத்திற்கு ஒரு வெளிவடிவமாக அமைகிறது என்பது வேதாந்திகளின் முடிவான கருத்து. வெளிப்படை வடிவம் ஸ்தூலம். அது உயர்ந்த பக்தி மார்க்கம். ஆனால் சூக்ஷ்ம வடிவம் மிகவும் உயர்ந்தது. அது வேதாந்தத்தின் எல்லை நிலம். அழகிய ப்ரமாண வடிவம் இது. அர்த்தாபத்திக்கு நெருங்கிய உருவகம். ஒரே சமயத்தில் அறிவையும் மனதையும் தொடும் காட்சி.

இணையும் ப்ரமாணங்கள்:

இந்தப் ப்ரமாணங்கள் ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல. இவை அனைத்தும் பலமுறை இணைந்தே செயல்படுகின்றன. சித்^{3}க்^{3}னிகுண்ட ஸம்பூ^{4}தா என்று லலிதாசஹஸ்ர நாமத்தில் ஒரு நாமம் வரும். சித்- என்றால் நம் மனம். அது அக்னி போன்றது. எரிக்கும் தன்மை படைத்தது. நம் எண்ணங்கள் உயர்ந்தால் சித^{3}க்னி நம்மிடமுள்ள நற்குணங்களை ஹவிசாக ஏற்கும்; மற்றவைகளை சாம்பலாக்கும். மாறாக நாம் பாச வலைகளில் சிக்கி தீய ஒழுக்கத்தில் வீழ்ந்தால், நம் செயல்கள் அனைத்தும் அந்த அக்னியில் அழிந்து போகும். நம் எண்ணம் உயர உயர அம்பாள் நம்முடைய ஆழ்மனத்தில் உறைகிறாள். நம்மை நல்வழிக்குத் தூண்டுகிறாள். நம்முடைய பல பாவச் செயல்களை அழித்து மன்னிக்கிறாள். அந்த நிலையில் சித^{3}க்னியில் எழுகிறாள்.

அடுத்த நாமம் தே^{3}வகார்ய சமுத்^{3}யதா என்பதாகும். தெய்வீகச் செயல்களுக்கு நம்மை எழுப்புபவள் என்று இதற்குச் சான்றோர் விளக்கம் அளிக்கின்றனர். அவளை வழிபடுபவரை நல்வழிப்படுத்துபவள் அவளே. தேவ கார்யம், அசுர கார்யம் என நம் செயல்கள்

இரு வகைப்படும். இதற்கு விரிவான விளக்கம் 'தைவாசுரசம்பத் விபாக யோகம்' என்னும் கீதையின் 16வது அத்தியாயத்தில் கிடைக்கும். நம் மனதில் தேவர்களும் அசுரர்களும் வசிக்கின்றனர். இதில் ஆசுர சம்பத் என்னும் தீயதை விலக்கி, தெய்விசம்பத் என்னும் நல்ல பாதையை அவள் காட்டுகிறாள். இதற்கு நம் பங்கும் உண்டு. சிதக்னியை நன்கு வளர்த்து கொழுந்து விட்டெரியும்படி செய்வது நம் பொறுப்பு. இதற்கு அவளை அறிதல் என்னும் ப்ரத்யக்ஷ ப்ரமாணம் அவசியம். அவளைத்தவிர வேறொன்றுமில்லை என்னும் அநுபலப்தியும், ஆன்றோர் சொன்ன பாதையாகிற சப்த ப்ரமாணமும் துணை நிற்கும். இது ப்ரமாணங்களின் பன்முகத்தன்மையை விளக்கும்.

ப்ரமாணங்களுக்கு அப்பால்:

மேற்சொன்ன இந்த ஆறுவித வழிகளிலும் சில தவறான முடிவுகளும் நேரிடலாம். கண்ணால் காணும் காட்சியை மனம் தவறாக அறிந்துகொள்ளலாம். தன்னை மறந்து இறைவன் வசப்பட்ட அடியாரைப் பித்தன் என ஏளனம் செய்வோர் எக்காலத்திலும் உள்ளனர். சொன்ன சொற்களும் அவற்றின் சூழ்நிலை உணராத காலத்தில், தவறாகப் பொருள் கொள்ளப் பட்டன. பாரத யுத்தத்தில் 'அஸ்வத்தாமா ஹத: குஞ்சர:' என்ற வாக்கியத்தை தருமன் சொல்வான். 'அஸ்வத்தாமன் என்னும் யானை இறந்தது' என்ற பொருள் படைத்த அந்த வாக்கியத்தை அவன் முடிக்கும் முன் கண்ணன் தன் சங்கை ஊத, 'அஸ்வத்தாமன் இறந்தான்' என்று துரோணாசாரியர் அறிகிறார். அவருடைய ப்ரமாணம் முழுமையானதல்ல. பாதி வாக்கியத்தைக் கேட்டுத் தவறான முடிவுக்கு வருகிறார். ஆயுதங்களைத் துறக்கிறார். திருஷ்டத்யும்னனால் கொல்லப் படுகிறார். அவர் இருந்திருந்தால் பாண்டவர்களின் வெற்றி கேள்விக் குறியாகியிருக்கும். அதனால் ப்ரத்யக்ஷ ப்ரமாணம் எல்லா சமயங்களிலும் ஏற்புடையதல்ல.

அநுமானத்திலும் பிழை ஏற்படலாம். மலையில் நாம் பார்த்த புகை வெறும் பனிப்படலமாக இருக்கலாம். அங்குத் தீயிருக்கும் என்று ஊகித்தது தவறாகிவிடும். சப்தப் ப்ரமாணம் ஆசாரியன்-மாணவன் இவர்களின் திறமையைப் பொருத்தே சரியான அறிவைப் பயக்கும். அர்த்தாபத்தி இன்னமும் கடினம். ஒரு சம்பவத்தால் மற்றொன்றை அறிய வேண்டும். உபமானம் சிறிய நோக்கம் கொண்ட ஒரு உக்தி. அது முழு அறிவை அளிக்காது.

ஆகையால் இந்த நியதிகளுக்குப் புறம்பாகவும் ஞானம் கைவரப்பெறும், என்பது தெளிவு. கண்ணப்பர் சிவன்பால் கொண்ட அன்பு எந்தவித ஞானத்தாலும் ஏற்பட்டதல்ல. மூடபக்தி என்றுகூட சொல்வார்கள். இதற்கு அறிவுக் கடலான ஆதி சங்கரபகவத்பாதர் என்ன விளக்கம் தருகிறார் தெரியுமா? 'பக்தி எதைத்தான் சாதிக்க இயலாது? அறிவற்ற ஒரு காட்டுவாசி, பக்தர் குழாம் அனைத்திற்கும் தலைவன் ஆகிவிட்டானே!!' (பக்தி: கிம் ந கரோத்யஹோ வனசர: பக்தாவதம்சாயதே| — சிவானந்த லஹரி). என்ன ஆச்சரியம் என்பதைக் குறிக்கும் 'அஹோ' என்னும் சொல்லை பகவத்பாதர் பயன்படுத்துகிறார். நாம் இதுவரை விசாரம் செய்த அறிவுப் பாதை இங்குப் பயனற்றது என்பதை உணர்த்துகிறார் அந்த அத்வைதப் பேரொளி.

இதற்கு வைணவத்திலும் சில ஒப்பு நோக்கக்கூடிய நிகழ்வுகளைக் காணலாம். ஆழ்வார் வரிசையில் நான்காவதாகத் திகழ்பவர் திருமழிசை ஆழ்வார். இவர் இன்னாளில் கும்பகோணம் என அழைக்கப் படும் திருக்குடந்தை தலத்தை அடைகிறார். இறைவன் அங்குப் படுத்த திருக்கோலத்தில் காட்சி தருகிறான். தரிசனம் உடனே கிடைக்கவில்லை. அவர் உடன் வேறு ஒரு முடிவுக்கு வருகிறார். ஆண்டவன் சோர்ந்து உள்ளான். அவனை நாம்தான் எழுப்பிப் பேச வேண்டும் என நினைத்து, உரிமை கலந்த சினத்துடன்

பேசுகிறார், 'ஏன் என்னுடன் பேசாமல் படுத்துக் கிடக்கிறீர்? ராமனாக அரணியமெல்லாம் சுற்றியதால் உமக்கு நோவெடுத்ததோ? எழுந்து எம்முடன் பேச வாரும்.' இறைவனும் அவருடன் பேச சற்றே எழுந்து கொண்டானாம்.

நடந்த கால்கள் நொந்தவோ? நடுங்க ஞானம் ஏனமாய்
இடந்த மெய் குலுங்கவோ? இலங்கு மால் வரைச்சுரம்
கடந்த கால் பரந்த காவிரிக் கரைக் குடந்தையுள்
கிடந்தவாறு எழுந்திருந்து பேசு; வாழி கேசனே

இதை எந்தவித ப்ரமாணத்தில் அடக்குவது என்ற கேள்வி எழுகிறது.

பரமனைப் பற்றியும் நம்மைப் பற்றியும், நம்மைச் சிந்திக்க வைத்த பெரும் சக்தி ரமண பகவான். ஆனால் அவர் நூலறிவைப் பெரிதும் போற்றவில்லை. எளிய சிந்தனைகளே அவர் கூறும் சித்தாந்தம். அகந்தையை அழித்து பேரருளைப் பெருவதே அவர் வகுத்த பாதை. மணிமாலையில் ஒரு பாசுரம்.

நூலறிவு அறியாப் பேதையன் எந்தன்
மாலறிவு அறுத்தருள் அருணாசலா

(அக்ஷர மணிமாலை -58)

ப்ரமாணங்கள் மூலம் பெறப்படும் அந்தப் பேரோளியை தன்னிலை இழத்தல் என்னும் மார்க்கத்தால் சுலபமாக நமக்குக் காட்டி அருளுகிறார் பகவான்.

கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் 2019

அக்டோபர்	13	ஞாயிறு	நள்ளிரவு 1 மணி	14	திங்கள்	அதிகாலை 3
நவம்பர்	11	திங்கள்	மாலை 7 மணி	12	செவ்வாய்	இரவு 8 மணி
டிசம்பர்	11	புதன்	காலை 11 மணி	12	வியாழன்	காலை 11 மணி

பகவான் புத்தரும், பகவான் ரமணரும் சந்திக்கும் சிறப்பு

சு. பரமேஸ்வரன் கோவை

பாரத நாடு பண்பாட்டிலே, ஞானத்திலே பரமோனத்திலே சிறந்த மிகப் பழமையான நாடு. இதன் பெருமைக்கு நாமே வாரிசு. எனவே தான் மகாகவி பாரதியார்,

பாரத நாடு பழம் பெரும்நாடு
நீர் அதன் புதல்வர் இந்நினைவு அகற்றாதீர்!

என்று நம்மை தட்டி எழுப்புகிறார்.

இத்திரு நாட்டில் இரண்டு ஜீவ நதிகள் என்றும் வற்றாது ஓடுகின்றன. ஒன்று அறம்; மற்றது அன்பு. நம் புறக் கண்களுக்கு அவைகள் சங்கமிப்பது புலப்படுவதில்லை. பகவான் புத்தரும், பகவான் ரமண மகரிஷியும், 25 நூற்றாண்டுகள் இடைவெளியில் சந்திப்பது, நாம் நடுவு நிலையில் நின்று பார்த்தால் மட்டுமே புலப்படும். அவர்கள் சந்திப்பது அவர்களது சமயக் கோட்பாடுகளில் அல்ல; சமய சமரசத்திலும் இல்லை. அவர்கள் சந்திக்கும் இடம் சமயாதீதம் ஆகும். அதுவே நமது பண்பாடும், உலக சமயமும் ஆகும்.

2500 ஆண்டுகளுக்கு முன்பு இப்புண்ணிய பூமியில் சடங்குகள் மிகுந்து, யாகங்களில் பல்லாயிரம் உயிர்கள் பலியிடப்பட்டு வர்ணாஸ்ரமம் முறை சமூகத்தைப் பல துண்டுகளாகப் பிரித்து வைத்தது. மோட்சம் அடைய யாகமும், சடங்குகளுமே பிரதானமாய் வலியுறுத்தப் பட்டு, அநீதம் உச்ச கட்டத்தினை எட்டியிருந்தது.

கி.மு. 563-ஆம் ஆண்டு புத்த பெருமான் தோன்றினார். தமது 30 வயதில் வீட்டைத் துறந்து ஆறு ஆண்டுகள் கடும்தவம் மேற்கொண்டு, மெய்ஞ்ஞானம் உற்றார். ஜீவ வழிமுறையை அகற்றி சமயத்தில் உண்மையான மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். ஜாதி, மத வேறுபாடு இன்றி, ஆண்-பெண், யார் வேண்டுமானாலும் துறவறம் மேற்கொள்ளலாம் என்று துணிந்து செயல்பட்டவர் புத்தர் ஒருவரே. புத்தபிரான், சாஸ்திர, சம்பிரதாயங்களை ஏற்றுக் கொள்ளவில்லை. தான் பெற்ற அனுபவத்தையே மக்களுக்குப் புரியும்படி அவர்களது மொழியில் எடுத்து உரைத்தார். அதேசமயம் நாஸ்திகத்தையும் ஏற்றுக் கொள்ளாதவர் புத்தர்.

பின்பு தோன்றிய ரமண மகரிஷிகளும் எந்த ஒரு சாஸ்திர சம்பிரதாயத்தையும் சார்ந்தும், வெறுத்தும் பேசியது கிடையாது. அவருக்கு அவைகள் எதுவும் தேவைப்படவில்லை. தனது சுய அனுபவம், சுய ஒளியே போதுமானதாக இருந்தது.

இவர்களது மகத்தான சிறப்பு என்னவென்றால், சமுதாயத்தில் கடை நிலையில் உள்ளவர்களுக்கும், கடைத்தேறுவதற்குரிய ஆன்ம ஞானத்தை அவர்களிடம் எடுத்துச் சென்றதுதான்!

கடவுள் மறுப்புக் கொள்கை:

பகவான் என்றால் அருள் பெற்றவர், ஞானம் பெற்றவர் என்றுதான் பொருள். சித்தார்த்தன் தீவிர முயற்சிக்குப் பின் அருள் நிலையை எய்தி புத்தர் எனப்பட்டார். கடவுளை நம்பும் மதங்கள் சடங்குகள், பிரார்த்தனை, வழிபாட்டு முறைகளையே அதிகமாகப் பேசும். கடவுளைப் பற்றி கவலைப்படாத மதங்கள் ஒழுக்கத்தைப் பற்றியும் தியானத்தைப் பற்றியும் மட்டுமே பேசும்.

நடைமுறை வாழ்க்கையில் அச்சாணியாக இருப்பது ஒழுக்கம். ஒழுக்கமின்மையே சமுதாயத்தில் காணப்படும் எல்லாக் கேடுகளுக்கும் ஆணிவேர். ஒழுக்கமற்ற நிலையில் யாரும் உயர் ஆன்மீக அனுபவம் பெறுதல் இயலாது. இதன் பரிபூரண நிலையாகவே மனிதன் தெய்வ நிலையை அடைகிறான்.

பகவான் ரமண மகரிஷி, சுவர்க்கம், நரகம், மறுபிறவி எனக் கூறி மக்களை பயமுறுத்தியோ, ஆசை காட்டியோ, அழைக்கவில்லை. கடவுள் இருக்கிறாரா? என்று யாராவது கேட்டால், "நீ இருக்கிறாயா? என்று முதலில் பார்?" என்பார். "உன் உண்மை இயல்பு நிலை என்ன என்பதை பார்" என்பார். அவரது 16 வயது முதல் 70 வயது வரையிலான வாழ்க்கை ஒழுக்கத்தின் கருவூலமாகத் திகழ்ந்தது.

சமய ஆதிக்கம், தத்துவக் குழப்பம், சாரமற்ற சடங்குகள் நிலவிய காலகட்டத்தில் சிக்கித்தவித்த மனித சமுதாயத்தை மீட்டெடுத்து, நன்றும் தீதும் பிறர் தர வாரா; உன் செயலில் கவனம் செலுத்து; உள்முகமாக உன்னைப் பார்! என்று ஆன்மீகத் தளம் அமைத்தவர் புத்தர். இதுதான் வாழ்க்கை என்று எடுத்துரைத்து, தவறான வழிகளைத் தவிர்த்துவிடு! அதன்படி நடந்தால் நீ மேலான நிலையை அடைவாய்! என்று சாமானிய மக்கள் பேசும் மொழியில் அருளுபதேசம் செய்தார். அவரது வழியை பின்பற்றிப் பலரும் மேலான நிலையை அடைந்தார்கள்.

ரமணரது காலம் விஞ்ஞானம் வளர்ந்து, அறிவின் ஆற்றல் மிகுந்து, பணவெறி, அதிகார வெறி மிகுந்து, பக்தியானது வியாபாரம் ஆன காலம். தமது அறிவிற்கும், புத்திக்கும் எட்டாத எதையும் மக்கள் நம்ப மாட்டார்கள். ரமணர் எந்தப் பெயருடைய தெய்வத்தையும் நம்புங்கள் என்று கூறவில்லை. எந்த விதமான வழிபாட்டு முறைகளையோ, சம்பிரதாயத்தையோ கடைப்பிடிக்கச்

சொல்லவும் இல்லை, அவற்றை மறுக்கவோ, வெறுக்கவோ இல்லை. எப்போதும் நடுநிலையில் சம நோக்குடன் இருந்தார். மனிதனின் ஆன்ம வளர்ச்சியின் நிலைப்பாடே கடவுள் தன்மை! என்பது இவரது கோட்பாடு.

காணும் தன்னை விட்டு, தான் கடவுளைக் காணல்
காணும் மனோமயமாம் காட்சி — ரமணர்

சினம் இறக்கக் கற்றாலும் சித்தி எல்லாம் பெற்றாலும் மனம் இறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே! — தாயுமானவர்

சித்தார்த்தன் ஏழு ஆண்டு தவ முயற்சிக்குப் பின்பு, மனிதனின் துன்பங்களுக்கு ஒரே முடிவு நிர்வாணம் என்னும் முக்தி நிலையைப் பெறுவதுதான்! என்று கண்டார். இதுவே ஜீவன்முக்தி நிலை எல்லாம். இதை என்ன பெயர் சொல்லி அழைத்தாலும் சரி, மோட்சம், முக்தி, கைவல்யம், சிவமாதல் எல்லாம் ஒன்றுதான். நிர்வாணம் என்றால் மனம் இறந்த நிலை. ஆண் பெண் இரண்டு உடல்கள் நிர்வாணமுற்றால் பெறுவது சிற்றின்பம்; இது யாவரும் அறிந்தது. மனம் நிர்வாணம் அடைந்தால் பெறுவது பேரின்பம்! இது யாரும் அறியாதது. இந்நிலை காலம், இடம், வினைக் கோட்பாடு ஆகியவற்றுக்கு அப்பாற்பட்ட நிலையாகும். எனவே இதை யாரும் வெளிப்படுத்த இயலாது. இதோ திருமூலர் கூறுவதைக் கேட்போம்:

மன வாக்குக் காமத்தால் வல்வினை மூளும்
மன வாக்கு நேர் நிற்கில் வல்வினை மன்னா
மன வாக்குக் கெட்டவன், வாதனை தள்ளால்
தளை மாற்றி ஆற்றத் தரும் ஞானி தானே

கல்விச் செல்வமும், பொருளும் சம்பாத்தியமும் செய்து அரசு வங்கிகளிலும், மூளையிலும் சேமித்து வைக்கலாம். அது நன்மை, தீமை இரண்டிற்கும் உதவும். மெய்யுணர்தல் என்ற இறைநிலையைச்

சம்பாதித்து மூளையில் சேமிக்க இயலாது. அது உள் ஒளியாக உள்ளிருந்து மலர்வதாகும். ஒவ்வொரு சாதகனும் தனக்குத்தானே சத்தியத்தை சுயமாகக் கண்டு உணரவேண்டும். எனவேதான் புத்தர் வீடு பேற்றை அடைவதில் சுயமுயற்சியைப் பெரிதும் வலியுறுத்துகிறார். இங்கே, தலாய் லாமா கூறியதை செவிமடுப்போம்:

பகவான் புத்தர் உன் பாவங்களைக் கழுவி விட மாட்டார். உன்னைப் பாவங்களில் இருந்து விடுவிக்க மாட்டார். பகவான் புத்தர் உன் பாவங்களை செவிமடுக்க மாட்டார். நீ கடைத்தேறுவதற்கு உரிய வழியைத்தான் காட்டியிருக்கிறார். புத்தர் போதி மரத்தடியில் ஞானம் பெற்றபோது, அவருக்கு நான்கு சத்தியங்கள் மனதில் தோன்றின. அவையே பிற்காலத்தில் புத்த மதக் கொள்கைக்கு அடித்தளமாக அமைந்தன. 1. மனித வாழ்க்கை துக்கம் நிறைந்தது. 2. துக்கத்திற்கான காரணம் உள்ளது. 3. துக்க நிவாரணம். 4. துக்க நிவாரணத்திற்குரிய வழிகள்.

பிறந்தார் உறுவது பெருகிய துன்பம்;
பிறவார் உறுவது பெரும் பேரின்பம்.
பற்றின் வருவது முன்னது; பின்னது
அற்றோர் உறுவது அறிக

(சீத்தலைச் சாத்தனார், மணிமேகலை)

காமம், வெகுளி, மயக்கம் உடையவர்கள் துன்பத்திற்கு உரியவர்கள். மேலும் இவற்றிற்கு எல்லாம் மூலமாய் இருப்பது ஆசையே எனக் கண்டார். முற்பிறவியில் பாவம் செய்தோர் இப்பிறவியில் துன்பத்தை அனுபவிப்பதையும் தமது ஞானக் கண்ணால் கண்டறிந்தார். மனிதனைப் பாவத்தில் தள்ளுவதற்குத் தூண்டுதலாய் இருப்பது காமம், கோபம் ஆகும். எது ஆசையோ, அதுவே கோபமாகவும் இருக்கிறது. ஒன்று விருப்புணர்ச்சி மற்றது வெறுப்புணர்ச்சி. விருப்பும்,

வெறுப்பும் எப்படி ஒன்றாகின்றன? ஒன்றிலே ஆசை ஏற்பட்டால், அது நமக்குக் கிட்டாவிடில் கோபமாக மாறுகிறது. ஒருவரிடம் வெறுப்பு ஏற்படக் காரணம், அவரது செயல்கள் நமது விருப்பத்திற்கு மாறாக இருப்பதுதான்! நமது ஆசைக்குக் குறுக்கே எது வரினும் அதன்மீது இயல்பாக நமக்குக் கோபம் வருகிறது; வெறுப்பு ஏற்படுகிறது. நம்மிடம் இல்லாத பணம், புகழ், அறிவு, அழகு மற்றவர்களிடம் இருந்தால் வருவது பொறாமை. ஆக, ஆறு உட்பகைவர்களுக்கும் மூலம் ஆசையே! அதுவே அறியாமையாகும், பிறப்பாகவும் உள்ளது. எனவேதான் தெய்வப்புலவர் திருவள்ளுவரும்,

அவா என்ப எல்லாஉயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாப் பிறப்பினும் வித்து

என்றார்.

இந்த உண்மைகளை எல்லாம் புத்தர், மிகவும் எளிமையாக, மக்கள் மொழியாக விளங்கிய பாலி மொழியில், ஐயம் திரிபுற விளக்கி அருளினார். நாடு தழுவிய வகையில் மக்கள் மொழியில் சமயப் பிரச்சாரம் முதலில் செய்தவர் புத்தர் ஒருவரே! அவரது உபதேசங்களின் தொகுப்பே 'தம்மபதம்' என்ற நூலாகத் தற்போது வழங்கி வருகிறது.

புத்தர் எதிர்மறையாகத் துன்பம் எங்கும் இருக்கிறது என்று கூறியதை ரமண பகவான் உடன்பாடாக எல்லா உயிர்களும் விரும்புவது சுகமே என்றார். "ஆசை என்பது என்ன? அதுவும் மனதில் தோன்றும் எண்ணம்தான். அந்த எண்ணம் 'நான்' என்னும் மையத்தை வைத்தே சுழல்கின்றது. நினைப்பு என்பது ஒரு தொழில், அதை விடுத்து ஓய்வு கொள்; உலக விவகாரங்களிலிருந்து மனதைத் திருப்பி, தன் உண்மை இயல்பை நாடி இரு. தன்னை விடாது இயல்பாய் இருத்தலே சுகம்" என்பார் ரமணர்.

நான் யார்? எனக்கு உருவம் உண்டா? இல்லையா? என்பதைப் பற்றி ஒன்றும் தெளிவாகத் தெரியாதபோது, சொர்க்கம், நரகம் கடவுளைப் பற்றிய விவாதம் வீணேயாகும். சாத்திரக் குப்பையைக் கிளறி, கிளறி எதையோ அறிந்துகொள்ளத் துடிக்கிறான். பேசப் பிதற்றி, பணம், புகழ் சம்பாதிக்கத் துடிக்கிறான் மனிதன். ஆனால் தன்னை அறிய தனக்கொரு கேடில்லை என்ற ஆன்றோர் மொழி ஏனோ நினைவுக்கு வருவதில்லை. ரமண மகரிஷியால் உபதேசிக்கப்பட்ட 'நான் யார்?' என்ற கேள்வியானது கூர்ந்த அறிவுள்ளோர்கள் இடையே ஒரு பரபரப்பை ஏற்படுத்தியது. நவீன உளவியலாரும் அதுகேட்டு வியப்புற்றனர். நாம் மனக் கலக்கமுற்று சாந்தி இல்லாமல் இருப்பதற்கு மனம் ஓயாமல் சலித்துக் கொண்டிருப்பதே காரணம். இதுவே நம்மைப் பந்தப் படுத்தி, ஆட்டிப் படைக்கிறது. எல்லாச் சாத்திரங்களின் நோக்கமும் மனதை அடக்குவதேயாகும். அது ஒரு நாயைப் போல சதா குரைத்துக்கொண்டே இருப்பதால், 'நாய் ஓட்டும் மந்திரம் நான்மறை நால்வேதம்' என்கிறார் திருமூலர்.

தேகத்தில் 'நான்' என்று நினைப்பது எதுவோ அதுவே மனம். தோன்றும் நினைவுகளுக்கு அடிப்படை 'நான்' என்னும் நினைவே. 'நான் யார்?' நான் எங்கிருந்து எழுகிறது? என்ற இரண்டு வினாக்களின் வழியே ஆன்ம விசாரம் செய்து முக்தி பெறலாம் என்பதே ரமணரது கோட்பாடு. எண்ணங்களின் தொகுப்பே மனம். மனதின் உருவம் அகந்தையாதலால் அதன் அழிவே முக்தி. மனதின் உருவம் யாது? மனோவிருத்திக்குச் சற்றும் இடம் தராமையே அப்பயிற்சியாகும். அதுவே மனதிற்குச் சாவு மணி அடிப்பதாகும்.

மனதின் உருவை மறவாது சாவ
மனமென ஒன்றிலை உந்தீபற!

உதித்த இடத்தில் ஒடுங்கி இருத்தல்
அது கன்மம், பக்தியும் உந்தீபற
அது யோகமும் ஞானமும் உந்தீபற! — ரமணர்

இங்கே ஒன்றைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். மன ஒடுக்கமும், மனோ நாசமும் வெவ்வேறு நிலைகளாம். யோகப் பயிற்சியினால் மனமொடுக்கம் ஏற்படும். இதில் சுக அனுபவம் மட்டுமே உண்டு. முக்தி என்பது கிடையாது. ஆனால் நரை, திரை அற்று, நோய் நொடி இல்லாமல் வாழ்ந்து, இறந்து மறுபிறவி உண்டு. திகைப்புற வேண்டாம். இதோ அகப்பேய் சித்தரின் பாடலைப் பாருங்கள்:

எத்தனை காலமும் தான் அகப்பேய்
யோகம் இருந்தால் என்?
மூத்தனும் ஆவாயோ? அகப்பேய்
மோட்சமும் உண்டாமோ?
நாச மாவதற்கே அகப்பேய்
நாடாதே சொன்னேனே! — அகப்பேய் சித்தர்

ஞானிகளுக்கு மட்டுமே முக்தி என்னும் பிறவாமை கிட்டும். இவர்களுக்கு நரை, பிணி உண்டு. ஆனால் பிறப்பு அற்றுவிடும். புத்தர், ராமகிருஷ்ணர், ரமணர், கிருஷ்ணமூர்த்தி முதலியோர் பிணியுற்றே தன் உடலைத் துறந்தனர். அவர்களைப் பொறுத்தமட்டில், இறப்பு என்பது இல்லை. அவர்களது வாழ்வே மரணமிலாப் பெருவாழ்வு. ஜெக மீது இருந்தாலும் மரணம் உண்டு என்பது சதா நிஷ்டர் நினைவதில்லை.

சிந்தை அறியார்க்கு ஈது போதிப்பது அல்லவே.
செப்பினும் வெகுதர்க்கமாம். — தாயுமானவர்

ரமணரின் ஞான விசாரமாவது, ஒளி இருளைத் தேடுவதுபோல், அறிவு அறியாமையைத் தேடுகிறது. ஒளியில் இருளும், இருளில் ஒளியும் ஒன்றாவது போல், அகந்தை அழிவுற்று, உள் உணர்வாய் தானாய் நிற்பதுவே முக்தி நிலையை எய்தும் உபாயமாகும்.



அறிவு உறும் தன்னை அறியாது, அயலை
அறிவது அறியாமை அன்றி அறிவோ?
அறிவு அயற்கு ஆதாரந்தன்னை அறிய
அறிவு, அறியாமை அறும். — ரமணர், உள்ளது நாற்பது

மனித வாழ்க்கையின் லட்சியம் ஒன்று எனவும், அதை அடையும் மார்க்கமும் ஒன்றே என்றும், அதன் அடிப்படை சத்தியம், நேர்மை, எளிமை, அச்செந் நெறிகளைத் தமது வாழ்க்கையில் கடைப்பிடித்து சிறந்த உதாரண புருஷர்களாகத் திகழ்ந்தவர்கள் பகவான் புத்தரும், பகவான் ரமண மகரிஷியும் ஆவர். ஞானத்தை எல்லோருக்கும் உபதேசிக்கவே இம்மண்ணுலகில் உடல் கொண்டு தோன்றினார்கள்.

(அடுத்த இதழில் முடியும்)

எல்லா மைலார்ட் 4

வி.நிரஞ்சன்

அருட் குன்றே
நின்றிட சென்றிட நினை விட இன்றே
— பகவான், அருணாசல அஷ்டகம்

பகவானின் மோன சமாதியின் ஆற்றல் சொற்களால் விளக்க ஒணாதது. சதா சலித்துக் கொண்டிருக்கும் மனதை பகவானின் சன்னிதி கண நேரத்தில் சாந்தப்படுத்திவிடும். இதுவும் பகவானின் சங்கற்பத்தால் விளைவது இல்லை. ஒளி இருளை விழுங்கிவிடுகின்றது. ஞான சன்னிதி அஞ்ஞான இருளை அகற்றிவிடுகின்றது.

அஞ்ஞானத்தாலேயே மனம் சதா சலிக்கின்றது. ஆனால் ஞானியின் சன்னிதியில் சூனியமாகும் மனம் சன்னிதி விட்டு அகல்கையில் மீண்டும் ஒருவனைப் பற்றிக் கொள்ளும். காரணம் மனதிற்குள் வித்துக்களாய் அடங்கியுள்ள வாசனைகள் எண்ணில் அடங்கா. ஆதலால் தான் மனோநாசம் என்றால் வாசனைகளை முற்றிலும் சூனியமாக்குவது ஆகும்.

பகவானின் சன்னிதியில் விளையும் சமாதி என்பது குருவருள் பக்தனுக்கு சொருப ஞானத்தை உணர்த்தி உள்முகமாய்ப் புகுவிக்கின்ற உபதேசம். ஒருமுறை சொருப ஞான சமாதி அடைந்துவிட்ட ஒருவன் பூரண ஆனந்த நிலையாகிய அதனை சகஜமாக்கிட வைராக்கியத்தோடு கிடைத்த நேரங்களில் எல்லாம் உள்முகமாகிவிடுவான். அதுதான் பக்குவிகளின் தன்மை. திட சித்தம் இல்லாத ஒருவனை வாசனைகள் கடல் அலைகள்போல் இடைவிடாமல் வந்து மோதி வெளிமுகத்தன் ஆக்கிவிடும்.

பகவானது சன்னிதியில் விளைந்த சாந்தானுபவத்தை நித்தியானுபவமாக ஆக்கிக் கொள்வதே எல்லாவின் நோக்கம் ஆக இருந்தது. புற உலக சாதனைகளின் வெறுமையையும் அகமுகமாய் ஆழ்ந்திருப்பதன் மேன்மையையும் எல்லா தெளிவாக அறிந்துகொண்டார். ஆதலால் அவர் பகவானின் சன்னிதியில் தொடர்ந்து இருந்து வரலானார். அச்சமயம் அவரது அன்னையார் உடல் நலம் குன்றிய நிலையில் இருந்தார். ஏழு ஆண்டுகளுக்கு முன்பாகவே எல்லாவின் தந்தையாரின் வாழ்வு முடிந்து விட்டிருந்தது.

அந் நிலையில் எல்லாவின் அன்னையார் தனித்தே வாழ்ந்து கொண்டிருந்தார். இரண்டாம் உலகப் போரின் கடுமையான காலத்திலும் தனித்தே வாழ்ந்து வந்திருந்தார். எல்லாவும் அன்னையாரின் பக்கத்தில் இருந்துவர விரும்பியபோதும், தனக்குக் கிடைத்த குருவருட் சன்னிதி வாய்ப்பை விட்டுவிட மனமில்லாதவராய் இருந்தார். ஒருபுறம் தனித்த உடல் நலம் குன்றிய அன்னையார், மறுபுறம் குருவருட் சன்னிதி. எலினார் பாலின் நோயி, மேஜர் சாட்விக், ஆர்தர் லூசியா தம்பதிகள், கை ஹேக் முதலியோரின் வாழ்விலும் ஒரு கால கட்டத்தில் குருமுக ஈர்ப்புக்கும் புறமுக ஈர்ப்புக்கும் இடையில் போராட்டம் சோதனையாய் நிகழ்ந்தது.

எல்லா தனது மனக் குழப்பத்திற்கான தீர்வை பகவானிடமே நாடினார். எல்லா சொல்வதை எல்லாம் பகவான் கவனமாகக் கேட்டனர். நெடுநேரம் மௌனம் காத்த பின் அவர், “மனம் அல்லது அகந்தை என்று ஒன்று இல்லை,” எனத் தெரிவித்தனர். “மனத்தின் உருவை மறவாது உசாவ; மனம் என ஒன்றில்லை உந்தீபற; மார்க்கம் நேர்ஆர்க்கும் இது உந்தீபற” என்பது பகவான் வாக்கு. எல்லா தனது பிரச்சினையை வேறு விதமாகக் கேட்டார்: “நான் நீங்கவேண்டுமா அல்லது இங்கே தங்க வேண்டுமா?” பகவான் நேரம்

தாழ்த்தாமல் "இங்கே என்று ஒன்று இல்லை, ஜெனிவா என்று ஒன்றும் இல்லை. இந்த பாவனைகள் எல்லாம் (பாவிப்பவனைச்) சார்ந்து எழுபவை" என்றனர்.

ஓர் ஆண்டிற்கு முன் இதே குழப்பம் கை ஹேகிற்கு இருந்தது. அவரது தாயார் உடல்நிலை கவலைக்கிடமாய் இருந்தது. பகவானை விட்டுப் பிரிகின்ற தருணம் ஹேக் பகவானிடம், "இனி உங்களோடு கொண்ட உறவினை நான் எவ்வாறு அமைத்துக் கொள்வது?" என்று வினவினார். பகவானது பதில்: "கடவுளோடு கொள்ளும் உறவாகவே அல்லது, உனது சொருபத்தை கடவுள் என்று அறிந்து கொள்ளும் பக்குவம் உடையவனாயின், சொருபத்தோடு கொள்ளும் உறவாகவே (எடுத்துக் கொள்ளலாம்)." இப்படிக் கூறிய பின் பகவான் ஹேகை நோக்கி "பிரிவதற்கு வருந்தாதே. நீ எங்கு சென்றாலும் நான் உன்னோடு இருப்பேன்," என்றனர். மேலும் ஹேக் பகவானிடம், "எனது அன்னை வேதனைப் படும்பொழுது நான் எப்படி அவர்களுக்கு உதவுவது?" என்று கேட்டபொழுது, "சொருபத்தில் இருந்து வர முயலுவதன் வாயிலாகவே நீ அவர்களுக்கு உதவ முடியும்," என்று மறுமொழி புகன்றனர் பகவான்.

பிப்ரவரி 1945 ஆசிரமத்திலிருந்து எல்லா சுவிட்செர்லாந்திற்குப் பயணமானார். ஜூன் 1945, ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு தனது சொந்த பூமியான சுவிட்செர்லாந்தை அடைகின்றார். எல்லா மேற்கொண்டிருந்த அதி தீர பயணச் சாதனைகள் அவரை இலட்சியப் பெண்மணி அல்லது பெண்களுக்கு ஓர் எடுத்துகாட்டாக உயர்த்தியிருந்தன. தன்னுடைய தாயை கவனித்துக் கொள்வது ஒரு புறமும், நேர்காணல்களும், சொற்பொழிவுகளும், வல்லுனர்கள் குழுக்களில் பங்கேற்புகளும் மறு புறமும், என்று எல்லாவின் வாழ்வு துவங்கியது.

இருந்தும் எல்லா பலவீனமாக இருப்பதாக அவருடைய நண்பர் கூறி 2000 மீட்டர் உயரத்தில்

உள்ள சண்டோலின் என்னும் பள்ளத்தாக்கில் தனது ஷாலெயில் (chalet) தங்கி மூன்று மாதங்களாவது ஓய்வு எடுத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்துகின்றார். எல்லாவிற்கு அந்த மலை சரணாலயமாய் விட்டது. அவருக்கு அந்த சூழல் மிகவும் பிடித்துப் போய்விட்டது. தனது சேமிப்புகள் அனைத்தையும் திரட்டி அந்த மலைக் கிராமத்தில் சிறிய ஒரு வீட்டடி மனை வாங்கினார். அங்கே 1948-இல் ஒரு சிறிய ஷாலெய்யைக் கட்டிக் கொண்டார். அந்தச் சரணாலயத்திற்கு அவர் "அட்சலா" என்று பெயர் வைத்தார்.

அருணாசலத்தின் சாரலில் ரமண சன்னிதியில் தனது ஆன்ம தாகம் சாந்தி அடைந்ததைப் போற்றுமுகமாக "அசலா" என்கின்ற பதத்தை "அட்சலா" என்று தனது மொழிக்கேற்ப மாற்றம் செய்துகொண்டார். அக்குடிலின் உட்புறம் பகவானின் மூன்று படங்கள் அலங்கரித்தன.

உட்புறத்தே அவர் செய்திருந்த அமைப்பு அவர் ஒரு கடற் பயணத்தில் செல்லுவதுபோல் இருந்தது. ஆனால் இம்முறை அவர் வெளிமுக நீர்ப்பரப்பில் பயணம் செய்யவில்லை. சித்த பூமியின் நிலப் பரப்புகளின் வாயிலாக உண்முகப் பயணம் செய்யலானார்.

ஆறு மாதங்கள் அந்தக் குடிலில் அவர் தங்குவது வழக்கம் ஆயிற்று. அவரது சாதனைகளும், யாரும் செல்ல அஞ்சிய இடங்களுக்கு எல்லாம் சென்று பலதரப்பட்ட நிலங்கள் பற்றியும் பலதரப்பட்ட மக்கள் பற்றியும் அவர்கள் வாழ்க்கைமுறை வேறுபாடுகள் பற்றியும் அவர் நேர்முகமாகச் சேகரித்திருந்த செய்திக் குவியல்களும், அவரை எங்கும் எல்லோரலும் வரவேற்கப் படுகின்றவராய் உயர்த்தியிருந்தன.

பயணங்கள் தொடர்ந்தன. ஆனால் அவரது உண்முக வாழ்வு நிகழ்ந்துகொண்டே இருந்தது. தனியாக இருக்கையில் நெருங்கிய அன்பர் அவரது உண்முக வாழ்வு பற்றி அறிந்துகொள்ள ஆர்வப் பட்டனரேல் அவர் மனம் திறந்து பகவானது சன்னிதி

மகிமையையும் அதனால் வெளிமுகத்திலிருந்து முற்றிலும் உள் முகமாய்த் திருப்பப்பட்டு உள் ஆழ்ந்த சுகத்தையும் ஆன்ம சொருபத்தின் மெய்மையையும் பரிபூரணத்தையும் பற்றிப் பகிர்ந்து கொள்வது உண்டு.

1946-இல் பகவானது அருணை விஜய பொன் விழா மலரில் அவரது கட்டுரை அடங்கியுள்ளது. வெளி நாட்டினர் பலரும் பகவானைக் குறித்து எழுப்புகின்ற சந்தேகத்திற்குப் பதில் அளிக்குமுகமாக அந்தக் கட்டுரை அமைந்திருக்கின்றது.

மலை அடிவாரத்தில் ஆசிரமம் துவங்கிய காலத்தில் பகவான் பலவித பணிகளைச் செய்துவந்திருக்கின்றார். அதிகாலையில் மூன்று மணிக்கே எழுந்து காலைச் சிற்றுண்டிக்கான காய்களை நறுக்கி வைப்பதிலிருந்து பின்னர் சிற்சில சமையற் பணிகளையும் அவர் செய்து வந்திருக்கின்றனர். கடுமையான பணிகளையும் பகவான் செய்திருக்கின்றனர். காலம் செல்லச்செல்ல பலரும் பணிகளைச் செய்ய ஆரம்பித்ததனாலும் அவர்களின் விருப்பப்படியே அவர்கள் செய்வதற்கு பகவான் இசைந்ததனாலும், பணிகள் பகவானை விட்டு விலகின. மேலும் பக்தர்களும் ஆர்வலர்களும் பகவானை தரிசிக்கப் பெருவாரியாக வரத் துவங்கியதாலும் பகவான் தியான கூடத்திலேயே தங்கி விடலானார்.

சகஜ சமாதியே இயல்பாய் பகவான் அமர்ந்திருக்கும் பொழுது பூரண உணர்வு கூடிய மோனமே வடிவாய் இருந்தனர். அவரது சன்னிதியில் மனம் அடங்கிச் சுகானந்தம் அனுபவித்தபவர்களே அவரது மோனத்தின் ஆற்றலை அறிய வல்லார். பிறர் பகவான் பெரும்பொழுது சும்மாவே அமர்ந்திருக்கின்றார், பிறரும் அவரது சன்னிதியில் சும்மாவே அமர்ந்திருக்கின்றனரே என்று தவறாக அபிப்பிராயப்பட்டு பகவானின் மீது குறை காண முயன்றனர். சிலர் பகவானிடமே தங்களது ஐயப்பாட்டினைக் கூறி விளக்கம் கேட்டனர். இதற்கு பகவான் பல விதங்களில் விடை அளித்திருக்கின்றனர்.

உணர்ச்சிகளைத் தட்டி எழுப்புகின்ற பெரும் பிரசங்கிகளின் பேச்சினால் ஒருவன் அந்தத் தருணத்தில் உற்சாகம் அடைகின்றான். ஆனால் சிறிது நேரத்தில் அந்த உற்சாகம் மறைந்து போய்விடுகின்றது. ஆனால் ஞானியின் சன்னிதியில், மனம் அடங்கி சுகானந்தம் அனுபவித்த ஒருவன் சச்சிதானந்தமே தனது சொருபம் என்று கண்டுகொண்டு தனது வாழ்நாளில் சொருப ஞானத்தை இயல்பெனப் பெற விழைகிறான். அதற்கான சிரத்தையோடு முயலுகின்றான். நீடித்ததும் உயர்ந்ததுமான பயனை நல்குவது பெரும் பிரசங்கியா இல்லை மோன ஞானியா என பகவான் கேட்பதுண்டு.

"ஞானியின் செயலற்ற நிலையில் நிகழும் செயல்கள்" என்ற தலைப்பில் எல்லா தான் கண்டுகொண்ட பகவானின் சிறப்புகளை இந்தக் கட்டுரையில் விளக்கியிருக்கின்றார். அனித்திய உலகம், அனித்திய உடலம், அனித்திய போகங்களின் வெறுமையிலிருந்து விடுபட்டு நித்திய இருப்பு அறிவு ஆனந்த சொருப நிலையில் ஞானி ஒருவர் இருந்து வருகின்றனர். அவர் இந்த சாதனையை நித்தியமும் நிகழ்த்திக் கொண்டிருக்கின்றனர். மேலும் அவர் தனது சொருப நிலையே ஜீவர்கள் அனைவரின் சொருப நிலை என்று உறுதி அளிப்பதோடு மட்டும் அல்லாமல் தனது சன்னிதியில் அமரும் பலரும் மனம் அடங்கி அந்த ஆனந்தத்தை அனுபவிப்பதற்குக் காரணராக விளங்குகின்றார். புலப்படுகின்ற உலகத்தையும், புலன்களுக்கும் மனதிற்கும் எட்டாத பூரணப் பொருளையும் இணைக்கும் பாலம் அவர். பொய்யையும் மெய்யையும் இணைக்கும் பாலம் அவர். தனது சொருப உண்மையே உயிர்கள் அனைத்தின் சொருப மெய் என்று சொலாது சொல்லி உணர்த்த வல்லவர். சொல் அற நிற்றலே தன்னை அறிவதாம் என்று சதா மோனோபதேசம் செய்துகொண்டிருக்கும் அவரே உண்மையில் செயற்கரிய செய்பவர் என அறுதியிட்டுக் கூறுகின்றார் எல்லா.

மனதாலும் இந்திரியங்களாலும் அறிபடும் பொருளே பொருள் என்று அனித்திய திருசியங்களை வழிபடுகின்ற அனைவரின் மருளையும் நீக்கும் விளக்கமாக அமைகின்றது இந்தக் கட்டுரை.

ஆசிரமத்தில் எல்லா இருந்துவந்த சமயம் பகவானது பக்தர்கள் பலரோடும் பழகி வந்தார். அவர்கள் மூலமாக பகவானின் சிறப்பைப் பற்றியும் அவரது உபதேசங்கள் பற்றியும் நிறைய அறிந்து வந்தார். புகைப்படங்கள் எடுப்பதில் வல்லவரான அவர் பகவானை பல கோணங்களில் படம் எடுத்திருக்கின்றார். பகவானைப் போற்றி வழிபடும் எச்சம்மாள், முதலியார் பாட்டி முதலியோரையும் மேலும் பலரையும் படம் எடுத்துள்ளார்.

செய்தியாளராக அவர் பயணித்த காலத்தில் எடுத்த படங்கள் ஆவணங்களாகக் கருதப் படுகின்றன. அவற்றை வைத்துக் கொண்டு அவர் நீண்ட விளக்கச் சொற்பொழிவுகளை அளித்திருந்தார். தொழில் முறை நுணுக்கங்களில் வல்லவரான புகைப்படக் கலைஞராக கடந்த காலத்தில் விளங்கினார். அவரது படங்களின் மூலங்களை ஒரு அருங்காட்சியகத்திற்கு அளித்துவிட்டார்.

1996-இல் அவரது தொண்ணூற்று மூன்றாவது வயதில் அவர் பகவான் தொடர்பான தனது படங்களின் மூலங்களில் இருந்து பிரிண்ட் எடுத்து ஆசிரமத்திற்கு அனுப்பும்படி அவ்வருங்காட்சியகத்தை வேண்டிக்கொண்டார். அந்த அருங்காட்சியகம் பல அரிய படங்களை ஆசிரமத்திற்கு அனுப்பியது. 1996 பகவானின் அருணை விஜய நூற்றாண்டு விழா மலரில், “பகவானது புகைப் படங்கள்: ஒளியால் வரையப்பட்டவை” என்னும் தலைப்பில் தேவ் கொகோய் என்னும் அன்பரால் அவை வெளியிடப் பட்டிருக்கின்றன

செயல்கள் நிறைந்த வாழ்வு ஒரு பாதியும், உள் முகமாய் தன்மெய்யில் ஒன்றிவிடும் சுவாத்தும பக்தி நிறைந்த வாழ்வு மறு பாதியுமாய் வாழ்ந்து வந்த எல்லா 1997-ஆம் ஆண்டு முன்னீர் நதி போலும் ஒய்ந்தனர்.

கடைசி இரண்டு ஆண்டுகள் அவருக்கு அருகில் இருந்து அவருக்கு உதவி செய்துவந்தவர் ஆன் டெரியாஸ் என்னும் அம்மையார். அந்த அம்மையார் ஏதோ ஒரு சக்தியினால் எல்லாவின் பால் ஈர்க்கப்பட்டு அவருக்குச் சேவை செய்ய வந்திருந்தார். காலத்தினால் அவர் செய்த சேவையால் எல்லா அருள் வயப்பட்டார். ஆன் எல்லாவிடமிருந்து வாழ்வின் உன்னத நோக்கத்தையும் அகமுக உண்மைகளையும் பற்றி நிறைய தெரிந்துகொண்டு புண்ணியரானார்.

எல்லாவைப் பற்றி அவர் தெரிவித்த பொருள் செறிந்த வாசகங்கள் மனதை நெகிழ வைப்பவை: ரமண மகரிஷி அவரது வாழ்வின் மைய விக்கிரமாகத் திகழ்ந்தார்; அவரைத் தாங்குகின்ற தூணாய் இருந்தார்; ஓங்கி உயர்ந்த சுடர் ஒளியாக விளங்கினார்; கலங்கரை விளக்காக அவருக்கு அருள் பாலித்தார். சண்டோலினில் அவர் மகரிஷியைப் பற்றிப் பேசாது ஒரு நாளைக்கூட நாங்கள் கழித்தது இல்லை. அவர் பல நிகழ்ச்சிகளை என்னிடம் சொல்லியிருக்கின்றார். அனைத்திற்கு மேலாக மகரிஷியின் கருணை நிறைந்த கண்களையும், ஆசிரமத்தில் தான் பெற்ற அனுபவங்களையும் வருணித்திருக்கின்றார்.

(தொடர் முற்றிற்று)

உதவிய முக்கிய கட்டுரைகள்: ஜனவரி 2018லிருந்து அக்டோபர் 2018 வரையிலான ரமணாஸ்ரம செய்தி மடலாக வெளி வரும் சரணாகதியில் உள்ளவை.

ரமண மையங்களை நோக்கி தொடர் கட்டுரை — ஒட்டன்சத்திரம்

ஸ்ரீரமணாஸ்ரமம் உருவாவதற்கு எப்படி பகவானை ஒரு பெரிய சக்தி இயக்கியதோ அதே சக்தியானது அவருடைய மெய்யன்பர்களையும் அவரின் பரிபூரண திருவருளின் மூலம் இயக்கிக் கொண்டிருக்கிறது.

ஒட்டன்சத்திரம் தென் தமிழ்நாட்டில் திண்டுக்கல்-பழநிக்கு இடையே மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கு மிக அருகே இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு பரபரப்பான சிறுநகரம். இந்த ஊரில் ஒரு முன்னாள் காம்ரேட்டான திரு.வடமலை கண்ணன் எப்படி தன்னையும் தன்னுடைய குடும்பத்தினரையும் பகவான் தன்பால் ஈர்த்து ஒட்டன்சத்திரத்தில் ஒரு ரமண கேந்திரம் நிறுவுவதற்கு தன்னை ஒரு கருவியாக பயன்படுத்தினார் என்பதை நம்மோடு பகிர்ந்து கொள்ளப்போகிறார். இனி அவருடன் சேர்ந்து நாமும் பயணிப்போம்.

நாங்கள் ஒட்டன்சத்திரத்தில் கடந்த 5 தலைமுறை களாக வாழ்ந்து வருகிறோம். பக்தி, ஒழுக்கம், கடவுள் நம்பிக்கை (வள்ளலார் நெறி) அதிகமுள்ள குடும்பச் சூழலிலே வளர்ந்து வந்தேன். ஆனால் எனக்கு மட்டும் ஏனோ இந்த ஆன்மிக நாட்டம் என்பது சிறிதளவுகூட இல்லாமல் இளம்வயதிலே திராவிட இயக்கங்களில் சேர்ந்து விட்டேன். மேலும் மார்க்சிய சித்தாந்தங்களில் மீது அதிக ஈடுபாடு ஏற்பட்டு பின்னர் படிப்படியாக உயர்ந்து ஒட்டன்சத்திரம் நகர் கம்யூனிஸ்ட்(மா) செயலாளராக ஆனேன். நானும் என் மனைவியும் ஒருவருக்கொருவர் நன்கு புரிந்துகொண்டு திருமணம் செய்துகொண்டோம். எனக்கு இரண்டு பெண் குழந்தைகள். திருமணம் ஆகி 6 ஆண்டுகள் வரை

வாழ்வில் எந்த மாற்றமும் இல்லாமல் நாட்கள் நகர்ந்து கொண்டிருந்த சமயம் 2000-ஆம் ஆண்டு எங்களின் இரண்டாவது குழந்தை கருவுற்றிருந்த நேரம் குழந்தை மிகவும் அபாயகரமான நிலையில் உள்ளது என்று மருத்துவர்கள் கூறினார்கள். கண்டிப்பாக கருவைக் கலைத்தால் மட்டுமே என் மனைவி பிழைக்க முடியும் என்று கூறி விட்டனர்.

எனக்குத்தான் கடவுள் நம்பிக்கை இல்லை என்றாலும்கூட நான் வளர்ந்த சூழல் வள்ளலார் அவர்கள் வழியில் வந்த ஜீவகாருண்ய ஒழுக்கமே, திருவருட்பா பாராயணம் கேட்டுத்தான் சிறுவயது முதல் வளர்ந்து வந்தேன். பிற உயிரைக் கொள்ளக்கூடாது என்ற கோட்பாடு வேரூன்றி இருந்தது. அதனால் எங்களுக்கு ஏனோ அந்தக் கருவை கலைக்க மனம் வரவில்லை. அப்போது என்னுடைய நண்பர் ஒருவர் ஆழியாறு வேதாத்ரி மகரிஷியைப் பற்றியும் அவர்களுடைய அமைப்பு ஒன்று ஒட்டசத்திரத்தில் இயங்கிக் கொண்டிருப்பதைப் பற்றியும் கூறினார். உடனே என் மனைவியை அங்கு அழைத்துச் சென்றேன். அங்கு கொடுக்கப்பட்ட பயிற்சிகளும் அங்கு சொல்லித் தரப்பட்ட மந்திரங்களும் எங்களின் குழந்தையின் வளர்ச்சியில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது. எங்களின் குழந்தையும் எந்தவித குறைபாடுகளும் இல்லாமல் பிறந்தது. அதனாலே அவள் பெயரை ஜீவகாருண்யா என்று வைத்துவிட்டோம். இதன்பிறகு என் மனைவிக்கு வேதாத்ரி மகரிஷி அவர்களிடம் மிகவும் மதிப்பும் மரியாதையும் வளர்ந்து கொண்டே வந்தது.

ஒருநாள் ஒட்டன்சத்திரத்தைச் சேர்ந்த திரு. சவடமுத்து ஐயா (தமிழ்நாடு மின்சாரவாரியத்தில் Dep.Fin.Controller ஆக இருந்தவர் மேலும் ஒட்டன்சத்திர நகர சன்மார்க்க சபையின் செயலாளர் மற்றும் மனவளக்கலை மன்றத்தின் பொறுப்பாளர் பதவியிலும் இருந்தவர்)

என்னை அழைத்து அப்போது ஆனந்த விகடனில் வாரவாரம் வெளிவந்து கொண்டிருந்த பல்வேறு மகான்களைப் பற்றிய தொடரைப் பற்றியும் அப்போது வள்ளலார் பற்றி வந்த கட்டுரை மிகவும் அருமையாக இருப்பதைப் பற்றியும் கூடவே அந்தந்த மகான்களின் புகைப்படங்களையும் அன்பளிப்பாக தருவதையும் கூறி என்னை வாங்கிப் படிக்க வலியுறுத்தினார். நானும் அப்போது சரி என்று கூறி வந்துவிட்டேன்.

அன்றைய தினம் என் தகப்பனாரைச் சந்திக்க என்னுடைய பூர்வீக இல்லத்திற்குச் சென்றிருந்தேன் உள்ளே நுழைந்தவுடன் முதலில் என் கண்களில் பட்டது அந்த வார வெளிவந்திருந்த ஆனந்த விகடன் புத்தகம். அதை உடனே எடுத்துக் கொண்டு படித்துவிட்டு திருப்பித் தருகிறேன் என்று கூறி என்னுடைய இல்லத்திற்கு விரைந்தேன். வீட்டிற்கு வந்து புத்தகத்தைப் பிரித்துப் பார்த்தால் அங்கே வள்ளலாரைக் காணவில்லை. அதற்குப் பதில் அங்கு ரமண பகவான் இருக்கிறார்.

என் வாழ்வில் ரமண பகவான் என்ற பெயரையே அன்றுதான் முதன்முதலாக கேள்விப்படுகிறேன். அவரின் படத்தை அன்றுதான் நான் பார்க்கிறேன். ஆனால் முதல்முறையே அந்தப் படம் என்னை வெகுவாக ஈர்த்துவிட்டது. அந்தப் புத்தகத்தில் பகவான் ரமணரின் பக்தரான திரு. இளையராஜா அவர்களின் ரமண ஞான ரதம் கட்டுரையும் பகவான் ரமணரின் 125-ஆம் ஜயந்தியை முன்னிட்டு ரமண ஞான ரதம் தமிழகம், கேரளா மற்றும் ஆந்திரா வரை சுற்றி வரும் அறிவிப்பையும் பயண அட்டவணையையும் கண்டேன். அதில் ரதம் மதுரைக்கு அடுத்து திண்டுக்கல் சென்று பிறகு வேறெங்கும் நிற்காமல் பழனிக்கு செல்வதாக இருப்பதைக் கண்டேன். உடனே திரு.சவடமுத்து ஐயாவிடம் விரைந்து,

ஐயா நீங்கள் வள்ளலார் கட்டுரை வந்துள்ளது என்று படிக்கச் சொன்னீர்கள். ஆனால் இங்கு ரமண மகரிஷி வந்துள்ளார் பாருங்கள், மேலும் ரமண ஞான ரதத்தைப் பற்றியும் எடுத்துக்கூறி நாமும் இந்த ரதத்திற்கு இங்கு ஒட்டன்சத்திரத்திலேயே வரவேற்பு கொடுக்கலாமே என்று கூறினேன். அவர் அதற்கு, கண்ணா! நான் இங்கு ஏற்கனவே ஒரு அமைப்பில் உள்ளேன். வேண்டுமென்றால் நீயே இதற்கான ஏற்பாடுகளை தனியாக செய்யலாமே என்றார். அதேசமயம் அவருக்கு பழநி திரு.N.சோமசுந்தரம் அவர்களிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. அப்பொழுது ஒரு பார்சலும் வந்தது. அது பழனி திரு.N.சோமசுந்தரம் அவர்கள் எங்களுக்கு அனுப்பியது (Divine Automatic Action). அந்தத் தபால் வந்து சேர்ந்ததா என்று உறுதி செய்வதற்காகத்தான் எங்களை அழைத்திருந்தார். அதில் ரதயாத்திரை தொடர்பாக பழநியில் நடக்கவிருக்கும் கூட்டத்திற்கு எங்களை அழைத்திருந்தார். மேலும் பகவான் படங்களும் உடன் இருந்தது. நான் உடனே போனில் அவரிடம் ஐயா நாங்கள் இங்கே ரதத்திற்கு வரவேற்பு தரலாம் என்றிருக்கிறோம் என்றேன். கடவுள் நம்பிக்கை துளிகூட இல்லாத நான் எப்படி இவ்வாறு கூறினேன் என்று தெரியவில்லை.

உடனே பழனிக்கு விரைந்து அங்கு நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு பகவான் படங்கள், அக்ஷரமணமாலை அடங்கிய புத்தகங்கள் எல்லாம் வாங்கிக்கொண்டு திரும்பினேன். ஒரு வார காலம் மட்டுமே இருக்கிறது. யாரைத் தொடர்புகொள்வது என்று கூடத் தெரியவில்லை. ரமணரைப் பற்றியே அன்றுதான் தெரியும். அப்புறம் எப்படி ரமணாஸ்ரமத்தைப் பற்றித் தெரியும். அந்தப் புத்தகத்தில் கட்டுரை எழுதியவர் திரு.இளையராஜா அவர்கள். அவரையும் எப்படித் தொடர்பு கொள்வது என்றும் தெரியவில்லை.

ஒட்டன்சத்திரத்தில் ரமண ஞானரதத்திற்கு வரவேற்பு கொடுக்கலாம் என்று முடிவு செய்துவிட்டோம் இனியும் காலம் தாழ்த்தாமல் அதற்கான பணிகளை வெகு சீக்கிரத்திலேயே செய்யத் துவங்கினோம். என் மனைவியின் மாத சம்பளம் ரூ.300 / அதைக் கொண்டு ரதயாத்திரைக்கான நோட்டீஸ்கள் அடிக்கத் துவங்கினோம். நோட்டீஸ்களை எடுத்துக்கொண்டு விநியோகம் செய்துகொண்டு வரும்போது ஒட்டன்சத்திரம் சன்மார்க்க சபையின் தலைவரும் நல்லாசிரியர் விருது பெற்றவரும் மேலும் திண்டுக்கல் மாவட்ட கல்வி அதிகாரியாக பொறுப்பில் இருந்தவருமான திரு.சென்னி சண்முகம் ஐயா அவர்களிடம் கொண்டு நோட்டீஸைக் கொடுத்த பொழுது, "நல்ல முயற்சி! இது விஷயமாக திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாச்ரமத்தைத் தொடர்பு கொண்டீர்களா?" என்று கேட்டார். நாங்கள், "இல்லை ஐயா! பழனியில் சொன்னார்கள்" என்றேன். "ரமணாச்ரமம் என்பது ஒரு பெரிய அமைப்பு. அவர்களுக்கு ரதம் நிற்பதற்கான Scheduled இல்லையென்றால் நிற்காமல் போய்க்கொண்டே இருப்பார்கள். இவ்வளவு ஏற்பாடுகள் செய்துவிட்டு நிறுத்தாமல் போனால் பாத்துக்கங்க அசிங்கம் உங்களுக்கு மட்டுமல்ல இந்த ஊருக்கேதான்" என்று கூறினார்.

பகவானின் பக்தரும், அடிக்கடி திருவண்ணாமலை ரமணாச்ரமத்திற்கு சென்று வருபவரும், வழக்கறிஞருமான எனது இனிய நண்பர் திரு.சுரேஷ் கண்ணன் நோட்டீஸ்களை காலை செய்தித்தாள்களில் உள்ளே வைத்துவிட்டால் மக்களிடம் எளிதாக போய்சேர்ந்துவிடும் என்று கூறினார். பிறகு பகவான் புலித்தோலில் அமர்ந்திருக்கும் படங்களை நிகழ்ச்சி குறிப்புகளுடன் நகரின் முக்கிய இடங்களில் கட்டித் தொங்கவிட்டோம். உடனே எங்களுக்குள் ஒரு

யோசனை அன்றைய தினம் ரதம் திண்டுக்கல் நகருக்கு வருவதை அறிந்து நானும் என் நண்பர்கள் இருவரும் அன்றிரவே திண்டுக்கல் கோட்டை மாரியம்மன் கோவிலுக்கு விரைந்தோம். சென்று பார்த்தால் கட்டுக்கடங்காத கூட்டம் ரமண ரதமானது மக்கள் வெள்ளத்தின் நடுவே கம்பீரமாக நின்றுகொண்டது. அப்போது தான் திண்டுக்கல்லைச் சேர்ந்த இனிய நண்பர் திரு.பாலபாரதி எங்களுக்கு அறிமுகமாகிறார் அவர் எங்கள் மூவரையும் அழைத்துக் கொண்டு ரமணாச்ரமத்தைச் சேர்ந்த திரு.T.V.சந்திரமௌலி அவர்களிடம் அறிமுக செய்துவைத்தார். அவரிடம் நோட்டீஸைக் கொடுத்தோம். அவர் உடனே எந்தவித யோசனையும் இன்றி இந்த ரதம் கண்டிப்பாக உங்கள் ஊரில் நின்று செல்லும் என்று உறுதியளித்து என்னை ரதத்தில் ஏறி பகவான் பாதத்தில் நோட்டீஸை வைக்கும்படி அறிவுறுத்தினார்.

மறுநாள் (28/07/2004) அதிகாலை 6 மணிக்கு பகவான் படத்தை விழா பந்தலில் வைத்து மலர்களால் அலங்கரித்திருந்தோம். திரு.சவடமுத்து ஐயா அவர்கள் அக்ஷரமணமாலை பாராயணத்தைத் துவக்கினார். அவர் ஒவ்வொரு பாடலைப் பாடியவுடன் நாங்கள் அருணாசல சிவ! சொல்லிக் கொண்டே இருப்போம். முதலில் சுமார் 10 அன்பர்கள் மட்டுமே இருந்தோம் நேரம் செல்லச் செல்ல ஆண்களும் பெண்களும் குழந்தைகளுடன் சாரை சாரையாக வரத்துவங்கினர். அக்ஷரமணமாலை 50 பாடல்கள் பாடிக் கொண்டிருக்கும்போதே ரதம் வந்துவிட்டது. விழா முடியும் நேரம் சுமார் 250 பேர் பந்தலில் நின்றிருந்தனர். அனைவரும் ரதத்தில் வரிசையாக ஏறி பகவான் சிலைக்கு மலர்களை தூவி வரவேற்றனர் அனைவருக்கும் பகவான் படங்கள், அக்ஷரமணமாலை புத்தகங்கள், இனிப்புகள் முதலியவை வழங்கப்பட்டது. எந்தவித முன்னறிவிப்பின்றி இப்படி ரதத்திற்கு

வரவேற்பளித்தது நீங்கள் மட்டும்தான் என்று ரதத்துடன் வந்தவர்கள் கூறினர். அதற்கு அடுத்த வருடம் (2005) திருச்சுழியைச் சேர்ந்த மௌன சுவாமிகள் ஒரு ரத யாத்திரை நடத்தினார். அதற்கும் இங்கு நல்ல வரவேற்பளித்தோம்.

அண்ணாமலையில் அருள் பாலித்து வருகின்ற அண்ணல் பகவான் ஸ்ரீ ரமணரின் 125 வது ஜயந்தி விழாவிற்கு திருவண்ணாமலை ரமணாச்ரமம், மதுரை, பழநி ஆகிய இடங்களிலிருந்து அழைப்புகள் வந்தது பேரானந்தம் அடைந்தோம்.

ஆனால் எங்கும் செல்ல இயலாத நிலை ஏற்பட்டது. செல்ல இயலாத நிலை என்பதை விட செல்ல விடாத நிலை என உணர்ந்தோம். எங்கும் செல்ல வேண்டாம் நாமே பகவானின் ஜயந்தி விழா கொண்டாடுவோம் என்ற புதிய எண்ணம் எங்கள் மனதில் உதயமாக, அதனை நடத்தியே தீருவது என 29/12/2004 மாலை 4.30 மணிக்கு முடிவு செய்தோம். எங்களால் சந்திக்க முடிந்த அன்பர்களுக்கெல்லாம் தகவல் தந்து, 30/12/2004 மாலை 4.30 மணிக்கு அருட்ஜோதி அரங்கத்தில் கூடி சிறப்பாகக் கொண்டாடினோம். இந்நிகழ்வுவரை புத்தகங்களில் மட்டுமே அறிந்த பகவானது மகத்துவத்தை எங்கள் வாழ்வினில் உணர்தலாய், உண்மையாய் அறிந்து உளம் மகிழ்ந்தோம்.

முதலில் பகவானை ஏற்றுக் கொள்ள மனம் வராத என் மனைவி பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக பகவானால் ஈர்க்கப்பட்டார். இப்போது என்னைவிட அவர்கள்தான் பகவான் மேல் அதீத ஈடுபாடு கொண்டிருக்கிறார். வெளியிலே சென்று பாராயணம் செய்து கொண்டிருந்ததைத் தொடர்ந்து, பகவானுக்காக ஏன் தனியாக ஒரு கேந்திரம் அமைக்கக்

கூடாது என்ற எண்ணம் எழுந்தது. அப்போது நாங்களே வாடகைக்கு குடியிருந்தோம் எப்படி பகவானுக்கென்று ஒரு தனி இடம் பார்ப்பது. உடனே எங்களின் பூர்வீக இடமொன்று (தற்போது கேந்திரம் அமைந்துள்ள இடம்) இருந்தது நினைவுக்கு வந்தது. பல ஆண்டுகளாக பயன்பாடின்றி முட்புதர்களால் மூடிக்கிடந்தது அங்கே ஒரு பழைய கட்டிடம் ஒன்றும் இருந்தது. ஒரு தை அமாவாசை தினத்தன்று நானும் என் மனைவி குழந்தைகளுடன் அந்த இடத்தில் பகவான் படத்தை வைத்து அக்ஷரமணமாலை பாராயணம் செய்து விட்டு என் தந்தையாரிடம் அந்த இடத்தைக் கேட்பதற்காக சென்றிருந்தோம். அவர் அந்த இடத்தைத் தர மறுத்துவிட்டார். பூர்வீக சொத்து என்பதால் நீதிமன்றத்தில் அந்த இடத்தை சட்டப்படி கேட்டு ஒரு வழக்கு ஒன்று போட்டேன். உடனே என் தந்தை அந்த இடத்தை என் பெயருக்கே எழுதி கொடுத்துவிட்டார்.

கேந்திரத்திற்காக வழக்குப் போட்டோம். வெற்றிகரமாக இடமும் கிடைத்து விட்டது. பகவான் தாயார் சன்னிதியிலிருந்தும் உத்தரவு கிடைத்துவிட்டது, இனியென்ன துரிதமாக வேலைகளை துவங்கிவிடலாம் என்று இதுபற்றித் தெரிந்துகொள்ள முதலில் மதுரை ரமண மந்திரம் மேலாளர் அவர்களைத் தொடர்பு கொண்டோம். அவர் உங்களுடைய வீட்டிலேயே ஒரு சிறிய பகுதியை அமைத்துக் கொள்ளுங்கள். டிரஸ்ட் என்று ஆரம்பித்தால் வரவு செலவு கணக்கு என்று வேலைப்பளுவைக் கூட்டிக் கொண்டே போகும் என்றார். திரு.சந்திரமௌலி அவரிடம் தொடர்பு கொண்டபோது அவரும் இதேபோலத்தான் உங்கள் வீட்டில் வைத்து பகவானை வழிபடுங்கள் அதுதான் கேந்திரம் என்று கூறினார். இந்த ரமண கேந்திரத்திற்கு யாரிடமும் எக்காரணத்தைக் கொண்டும் பணம் வசூல் செய்யக்கூடாதென்று வைராக்கியமாக இருந்தோம் அது இன்றளவும் தொடர்கிறது.

ரமண கேந்திரத்தின் அனைத்துப் பணிகளும் பகவானின் பரிபூரண அருளினால் முடிவடைந்து சித்ரா பௌர்ணமி (02/05/2007) தினத்தன்று பகவானின் ஆசிர்வாதத்துடன் அவரது தலைமையிலே, அவரது முன்னிலையிலே, அவரது முழுப்பொறுப்பிலே அவருக்கே உரிய எளிமையுடன் துவக்கவிழா இனிதே நடைபெற்றது. திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாச்ரமத்திலிருந்து ஒட்டன்சத்திரம் ரமண கேந்திரத்திற்காக வந்திருந்த பகவான் பத்மாசனமிட்டு அமர்ந்திருக்கும் படம் முதன்முதலாக பிரிண்ட் செய்யப்பட்ட கலர் படம் ஆகும்.

துவக்கவிழா தினத்தில் நகரின் பல்வேறு பகுதியிலிருந்து அன்பர்கள் திரளாக கலந்து கொண்டனர். பகவான் படத்தை மதுரை ரமண கேந்திர பொறுப்பாளர் மதுரை திரு.சோமசுந்தரம் அவர்கள் திறந்து வைத்தார். பின்னர் வந்திருந்த அனைத்து அன்பர்களும் அருணாசல அக்ஷரமணமாலை பாராயணம் செய்தனர். விழாவில் கலந்து கொண்ட தமிழகத்தின் பல்வேறு ரமண கேந்திரத்தின் பொறுப்பாளர்கள் பகவான் வழியில் அவர்களது வாழ்வியல் அனுபவங்களை எளிமையாக அன்பர்களுக்கு புரியும் விதத்திலேயே எடுத்துக் கூறினர். இவ்விழாவிற்கு பொள்ளாச்சி திரு.பாலு அவர்கள் சுமார் 1000 பிரதிகள் அக்ஷரமணமாலை புத்தகங்கள் பகவான் பிரசாதமாக வழங்கியிருந்தார். அன்றைய தினம் கலந்து கொண்ட அன்பர்கள் அனைவருக்கும் பகவான் சிறிய படங்களுடன் அருட்பிரசாதமாக வழங்கப்பட்டது.

துவக்கவிழா தினத்திலிருந்து சரியாக 48 நாட்கள் தினமும் மாலை 6.30 மணியளவில் அக்ஷரமணமாலை பாராயணம் நடைபெற்று வந்தது.

திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாச்ரமத்தின் காலாண்டு இதழான 'தி மௌண்டன் பாத்' அக்டோபர் இதழில் ஒட்டன்சத்திரம் ரமண கேந்திரம் துவக்கவிழாவைப்

பற்றி ரமண கேந்திர நிகழ்ச்சிகள் பகுதியில் பிரசுரம் செய்திருந்தனர்.

ரமண கேந்திரம் இங்கு வந்த பிறகு இதனைச் சுற்றியுள்ள இடங்களில் பல்வேறு மாற்றங்கள் பகவானின் அருளினால் தானாகவே நிகழத் தொடங்கியது. முதலாவதாக இங்கு சுற்றியுள்ள மிகவும் பழமை வாய்ந்த கோவில்கள் மற்றும் ஒட்டன்சத்திரம் ராமசாமி சித்தர் சமாதி வளாகம் உட்பட அனைத்து புனித இடங்களுக்கும் பல ஆண்டுகளுக்குப் பிறகு குடமுழுக்கு நடக்கத் துவங்கியது. மேலும் பல முன்னேற்றங்களும் ஏற்பட்டன. கேந்திர துவக்கவிழா அன்று திரு.நடராஜன் ஐயா அவர்கள் கூறியதைப் போல பகவான் ரமணர் இங்கு வருகிறார் என்றால் காரணமில்லாமல் அல்ல விரைவில் இந்த இடத்தில் பல்வேறு மாற்றங்கள் நிகழப்போகிறது என்று கூறியது வெறும் சாதாரண வார்த்தைகள் அல்ல அனைத்தும் சத்தியவாக்கே என்று நாங்கள் உணர்ந்தோம்.

நைவேத்தியம்

‘நாம் படைக்கும் நைவேத்யத்தை இறைவன் அருந்துகிறார் என்பதை எப்படி அறிவது?’

சிஷ்யன் ஒருவன் தன் குருவிடம் ஒரு கேள்வி கேட்டான்.

“குருவே, நாம் படைக்கும் நைவேத்யத்தை இறைவன் அருந்துகிறார் என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இறைவன் சாப்பிட்டால் நாம் பிறருக்கு எப்படிப் பிரசாதமாக வழங்க முடியும்? குருவிடம் சிஷ்யன், கடவுள் படையலைச் சாப்பிடுவாரா’’? என்று கேட்டான்.

குரு எதுவும் சொல்லாமல், அவனை ஊடுருவிப் பார்த்துவிட்டு “நமது வேதாந்த வகுப்புக்கு நேரமாகி விட்டது. வகுப்பறையைத் தயார் செய். சிறிது நேரத்தில் நானும் வருகிறேன்” என்றார்.

பாடம் ஆரம்பித்த குரு, அனைத்தும் பூர்ணமான வஸ்துவிலிருத்தே தோன்றியது எனப் பொருள் கொண்ட பூர்ணமிதம் எனும் ஈஷாவாசிய உபநிஷத்தில் வரும் மந்திரத்தை விளக்கினார் குரு.

அனைத்து மாணவர்களும் மந்திரத்தை மனதில் உரு போடத் துவங்கினர்.

சிறிது நேரத்திற்குப் பிறகு கேள்வி கேட்ட சிஷ்யனை சைகையால் அழைத்தார் குரு.

குருவின் முன் பணிவுடன் வந்து வணங்கி நின்றான் சிஷ்யன்.

“எனதருமை சிஷ்யனே, மந்திரத்தை மனதில் ஏற்றி கொண்டாயா?”, என்றார்.

முழுமையாக உள்வாங்கி கொண்டேன் குருவே.

எங்கே ஒருமுறை சொல் பார்ப்போம்

கண்கள் மூடி மனதை ஒருநிலைப்படுத்தி கணீர் குரலில் கூற துவங்கினான்..

பூர்ண மித பூர்ண மிதம் எனக் கூறி முடித்தான்.

மெல்ல புன்சிரிப்புடன் குரு தொடர்ந்தார்..

நீ சரியாக மனதில் உள் நிறுத்தியதாகத் தெரியவில்லையே.. எங்கே உனது புத்தகத்தைக் காட்டு. பதட்டம் அடைந்த சிஷ்யன், புத்தகத்தைக் காண்பித்துக் கூறினான். "குருவே தவறு இருந்தால் மன்னியுங்கள். ஆனால் நான் கூறியது அனைத்தும் இதில் இருப்பதைப் போலவே கூறினேன்."

"இந்தப் புத்தகத்திலிருந்து படித்துதான் மனதில் உள்வாங்கினாயா? இதிலிருந்து உள்வாங்கினாய் என்றால் மந்திரம் இதில் இருக்கிறதே? நீ உன் மூளையில் மந்திரத்தை ஏற்றிக் கொண்டால் புத்தகத்தில் இருக்க கூடாதல்லவா?"

சிஷ்யன் குழப்பமாகப் பார்த்தான். குரு தொடர்ந்தார்,

"உனது நினைவில் நின்ற மந்திரம் சூட்சம நிலையில் இருக்கிறது. புத்தகத்தில் இருக்கும் மந்திரம் ஸ்தூல வடிவம். இறைவன் சூட்சும நிலையில் இருப்பவன். இறைவனுக்குப் படைக்கப்படுவது ஸ்தூல வடிவில் இருந்தாலும் அவன் சூட்சுமமாகவே உட்கொள்கிறான். நீ உள்வாங்கிய பின் புத்தகத்தில் மந்திரம் அளவில் குறைந்துவிட்டதா? அது போலத்தான் இறைவன் உட்கொண்ட பிரசாதம் அளவில் குறையாமல் நாம் எல்லோரும் உண்கிறோம். ஸ்தூலமாக இருக்கும் நாம் ஸ்தூலமாகவும், சூட்சுமமாக இருக்கும் இறைவன் சூட்சுமமாகவும் நைவேத்யத்தை உட்கொள்கிறோம்.

தனது பக்தியற்ற தர்க்கம் செய்த அறியாமையை குருவிற்கு நைவேத்யம் செய்து முழுமையடைந்தான் சிஷ்யன்.

செய்திகள்

திருவண்ணாமலை செய்திகள்

முருகனார் ஆராதனை

ஒப்பற்ற தமிழ்ப் புலமை, ஆன்ம ஞான அனுபவம், சிறந்த குருபக்தி, தன்னடக்கம் முதலான தெய்வீகப் பண்புகள் ஒருங்கே அமையப்பெற்ற முருகனார் ஸ்ரீ ரமண பக்தர்களுள் பெரிதும் மதித்துப் போற்றுதற்குரியவர் ஆவார். பகவானைத் தவிர வேறெந்த தெய்வத்தையும் பாடியறியாத முருகனார் 28-8-1973 ஆவணி அமாவாசை அன்று ஸ்ரீ பகவான் திருவடிகளில் கலந்தார். அன்னாரது சமாதி ஆச்ரம வளாகத்தில் அமைந்துள்ளது.

முருகனாரது ஆராதனை ஒவ்வொரு வருடமும் ஆச்ரமத்தில் சிறப்பாக அனுசரிக்கப்பட்டு வருகின்றது. இந்த ஆண்டு முருகனாரது 46-ஆவது ஆராதனை 30-8-2019 வெள்ளிக்கிழமை ஸ்ரீ ரமணாச்ரமத்தில் அனுசரிக்கப்பட்டது. அன்னாரது சமாதிக்கு சிறப்பு அபிஷேக அலங்காரங்கள் கிரமமாக நடைபெற்றன. அன்பர்கள் முருகனார் இயற்றிய பாடல்கள் மற்றும் அக்ஷரமணமாலை பாராயணம் செய்தனர். ஆராதனையின் சிறப்பு அம்சமாக மயிலை கபாலீஸ்வரர் திருக்கோயில் ஓதுவார் 'திருவாசக செந்நாவலர்' சத்குருநாத ஓதுவார் அவர்கள் 'ரமண சந்நிதிமுறை' பண்ணிசை நிகழ்த்தினார்.

முருகனார் இயற்றிய ஸ்ரீ ரமண தேவ மாலை, குருவாசகக் கோவை மற்றும் அநுபூதி வெண்பா முற்றோதல் 30-8-2019 முதல் 01-09-2019 வரை நடைபெற்றது.

அருணை விஜய தினம்

சுமார் 123 வருடங்களுக்கு முன்பு இதே செப்டம்பர் முதல் நாள், 1896-ஆம் ஆண்டு இளம் துறவியாக, (வேங்கடராமனாக) திருவண்ணாமலைக்கு பகவான் ரமண மகரிஷிகள் வந்தடைந்தார். ஆகஸ்ட் 29 அன்று மதுரையில் புறப்பட்ட பகவான், இரயில், பத்து மைல் நடை, பயணச் செலவுக்காகக் காதுக் கடுக்கனை வைத்து பணம் பெறுதல் எனப் பல இன்னல்களுக்குப் பிறகு, ஞானத் தந்தையாம் அருணாசலேசனை செப்டம்பர் முதல் நாள் வந்தடைந்தார்.

இந்நிகழ்வினைக் குறிக்கும் அருணை விஜய நாளை முன்னிட்டு வழக்கம்போல் மதுரையில் இருந்து திரளான அன்பர்கள் ஆச்ரமத்திற்கு ஆச்ரமத்திற்கு வந்திருந்தனர். அன்றைய தினம் ரமண அன்பர்கள் அருணாசலேஸ்வரர் ஆலயத்திற்குச் சென்று 'அருணாசல அக்ஷரமணமாலை' பாராயணம் செய்து அண்ணாமலையாரை வழிபட்டனர். ஆச்ரமத்தில் சிறப்பு அபிஷேகம் மற்றும் சிறப்பு அக்ஷரமணமாலை பாராயணம் நடைபெற்றன. கந்தாசிரமத்திலும் மதுரை அன்பர்கள் சிறப்புப் பாராயணம் செய்தனர்.

அன்றைய தினம் ரமணாச்ரமத் தலைவர் திரு. வே.சு. ரமணன் அவர்கள், மும்பை ரமண சத்சங்கத்தின் அமைப்பாளராக திறம்பட செயலாற்றி வந்த காலஞ்சென்ற திரு. S.N. ஐயர் அவர்கள் ஆங்கிலத்தில் பகவானைப் பற்றி எழுதிய 'Nobody' எனும் நூலை வெளியிட்டார்.

நவராத்திரி உற்சவம்

நம் வாழ்வின் இன்னல்களை நீக்கி, தேவியின் இன்னருளைப் பெற்றுத் தரும் வழிபாட்டு நியதிகளை சொல்லித் தருகிறது நவராத்திரி. நவராத்திரியின் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வடிவில் அம்பாளைத் தியானித்து, பூஜித்து வழிபட வேண்டும் என்பது ஐதீகம்.

இத்தகு பெருமையும் சக்தியும் வாய்ந்த நவராத்திரி விழா வழக்கம்போல் இவ்வாண்டும் ஆச்ரமத்தில் வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளது. செப்டம்பர் 28-ஆம் தேதியன்று அன்னை யோகாம்பிகை மாத்ருபூதேஸ்வரர் சந்நிதியிலிருந்து ஊர்வலமாக வெளிக்கொணரப்பட்டு, கொலுமண்டபத்தில் வைக்கப்பட்டு, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அலங்காரத்தில் அன்பர்களுக்கு அருள்பாலிப்பாள். 8-10-2019 அன்று மீண்டும் ஊர்வலமாக அன்பர்களால் சுமந்து செல்லப்பட்டு கர்பகிருஹத்தில் வைக்கப்படுவாள். ஒவ்வொரு நாள் பூஜையின்போதும் வேத மந்திரங்கள் முழங்க சிறப்பு ஆரத்திகள் நடைபெறும். ரமண அன்பர்கள் ஒவ்வொரு நாளும் பக்திப் பாடல்களை மனமுருகப் பாடுவர். சிறப்பு இன்னிசைக் கச்சேரிகளும் நடைபெறும்.

ரமண கேந்திர செய்திகள்

முருகனார் மந்திரம், இராமநாதபுரம்

ஸ்ரீ முருகனாரின் 46-ஆவது ஆராதனை 30-8-2019 வெள்ளிக்கிழமை அன்று இராமநாதபுரம் முருகனார் மந்திரத்தில் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. குட்லாடம்பட்டி சுவாமிகள் சாஸ்வதானந்த மகராஜ் முன்னிலை வகித்தார். மனவளக் கலை பேராசிரியர் கே. சுப்பராஜு சிறப்புச் சொற்பொழிவாற்றினார். முருகனார் மந்திர காப்பாளர் திரு. சிரஞ்சீவி, ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தார்.

திரளான ரமண அன்பர்கள் விழாவில் கலந்துகொண்டனர். அக்ஷரமணமாலை பாராயணம், சிறப்புப் பூஜைகளுடன் இறுதியில் அனைவருக்கும் பிரசாதம் அளிக்கப்பெற்றது.

ஸ்ரீ ரமண சத்சங், நங்கைநல்லூர் — வெள்ளிவிழா

27-9-2019 வெள்ளியன்று ஸ்ரீவரசித்தி விநாயகர் கோவில் பிரவசன மண்டபத்தில் மாலை 4.45 முதல் இரவு 8.00 மணிவரை கொண்டாடப்பட்டது. வேதபாராயணம், அக்ஷரமணமாலை பாராயணம் இவற்றுடன் துவங்கிய விழாவில் ரமண அன்பர்கள் சிறப்பிக்கப்பட்டனர். பூஜ்யஸ்ரீ ஓம்காரானந்த மஹாஸ்வாமிகள் 'அத்வைதா' என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

அருணாசல ரமணா — யாத்திரை காண்டம்

ரமண சரித்திர விளக்கம்—அருணாசல பயணம்

15-9-2019 மாலை 6.15 மணிக்கு சென்னை நாரத கான சபா மெயின் ஹாலில் பெங்களூர் RMCL மற்றும் சென்னை RASA இணைந்து வழங்கிய 'அருணாசல ரமணா' - பாகம் 3, இயல், இசை, நாடகத்தின் அரங்கேற்றம் நடைபெற்றது. கலைமாமணி டாக்டர் அம்பிகா காமேஷ்வர், ரமண நாட்டியார்ப்பிதா டாக்டர் சாரதா நடராஜன் சகோதரிகள் இணைந்து மிகவும் சிறப்பாக நாடகமாக்கம் செய்திருந்தனர். விழாத் துவக்கத்தில் திரு. காமேஷ்வர் அவர்கள் முன்னுரை விளக்கம் அளித்தார். இந்நாடகத்தில், சின்னஞ்சிறு மழலையர்

முதல் பெரியவர்கள்வரை ஆண்-பெண்டிர் அனைவரும் ஆத்மார்த்தமாக தம்மில் ரமித்து ரமணானுபவத்துடன் பங்காற்றினர். ஒவ்வொருவருடைய முகத்திலும் ரமண மலர்ச்சியைக் காணமுடிந்தது.

ஸ்ரீ சிவ தீனநாதன்



ஸ்ரீ சிவ தீனநாதன் 2019 ஆகஸ்ட் 1-ஆம் தேதி தமது 93 ஆவது வயதில் பகவானின் மலர்ப் பதத்தில் ஐக்கியமானார். சிறந்த ரமண பக்தையான ஸ்ரீ ஜானகி மாதா 1943-இல் நிறுவிய தஞ்சாவூர் ஆசிரமத்தில், ஸ்ரீ தீனநாதன் தங்கியிருந்தார்.

பள்ளி ஆசிரியராக இருந்த சிவதீனநாதன் தமது வாழ்நாள் முழுவதும் பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடித்து எளிமையாக வாழ்ந்தவர். தனது ஆன்மிக வாழ்க்கையில் தூய்மை, நேரம் தவறாமை மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றால் தனது மாணவர்களைக் கவர்ந்தார்.

குருவின்பால் பக்தி மிகுந்த இவர் இயற்றிய நூல்களில் 'ரமண விருந்து' மற்றும் 'கைவல்ய நவநீதம்' சிற்றுரை குறிப்பிடத்தக்கவையாகும்.

ஸ்ரீமதி. தர்மாம்பாள்

திருமதி. தர்மாம்பாள் கும்பகோணம் திப்பிராஜபுரத்தைச் சேர்ந்தவர். தமது எட்டாவது வயதிலேயே பகவானைத் தரிசிக்கும் நற்பேறு பெற்றவர். பகவான் மஹாநிர்வாணமடைந்த சமயம் ஜோதி தரிசனம் கண்டவர்.

திருமதி. தர்மாம்பாள் ஜூலை 28, 2019 அன்று தனது 85 வயதில் பகவான் மலர்ப் பதங்களில் ஐக்கியமானார். அன்னாரைப் பிரிந்து வாடும் கணவர் மற்றும் மூன்று மகன்களுக்கும் ரமணோதயம் ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

பகவான் ரமணரின் சேவை மையங்கள்

மைலாப்பூர் திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட்	.....	24611397
ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் மேலாளர் கண்ணன்	.....	9940418375
குரோம்பேட்டை, ரமணாலயம்	.....	9444261296
கிழக்கு தாம்பரம் திரு M.A. ராமசாமி	.....	9790873138
நங்கநல்லூர் திரு S. இராமமூர்த்தி	.....	22244667
மாம்பலம் திரு M.K. வைத்தியநாதன்	.....	23716495
விருகம்பாக்கம் திருமதி கௌசல்யா	.....	24790635
கொளத்தூர் கே.ஆர். கோபாலகிருஷ்ணன்	.....	9884355454
சூளைமேடு திரு V. ரமணன்	.....	9444172623
புதுச்சேரி ரமண கேந்திரம்	.....	0413-2272141
மதுரை சோமசுந்தரம்	.....	04522348157/2346102
இராமநாதபுரம் சிரஞ்சீவி	.....	9360047936
திருச்சுழி ஹாலாஸ்ய பட்டர்	.....	9442004615
மலையாண்டிபட்டினம் பாலசுப்பிரமணியம்	.....	9965622878
பொள்ளாச்சி ரமண குமார்	.....	9487016880
ஒட்டன்சத்திரம் வடமலைக்கண்ணன்	.....	9842912474
பழனி என். சோமசுந்தரம்	.....	9942327770
சேலம் குப்புசாமி	.....	0427-2295460
வந்தவாசி டாக்டர் ரவி	.....	9787180757
மடம் சுந்தரமூர்த்தி	.....	9942264556
திண்டுக்கல் பழ. முத்தையா	.....	9443070924
பூண்டி மாரியப்பன்	.....	9486576687

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

Printed at: **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.

ஸ்ரீ முருகனார் ஆராதனை விழா
ஸ்ரீ ரமணாச்ரமம், திருவண்ணாமலை

Registered with the Registrar of Newspaper for India RNI No.: TNTAM/2001/3542